* இந்து இலக்கியக் கழக வெளியீடு *

# இந்து வேதம்

# INDU VEDAM

மாநாட்டுச் சிறப்பு வெளியீடு

[redacted]

**1991**

வெளியீடு எண் : 144 காணிக்கை ரூ. 11·00

# இந்து வேதம்



ஞானச்சாரியார்

" ஆதிசிவனார் வேதம் முதல்
பிறம்ம வேதம் முடிய "
( ஒரு சுருக்க விளக்கம் )

# அறிமுகவுரை

## பதினெண் சித்தர் மடம்

இளைஞர்களாகச் சேர்ந்து உருவாக்கிட்ட இந்த இந்து இலக்கியக் கழகம் இருபதாண்டு காலத்திற்கும் மேற்பட்ட வரலாற்றினை உடையதாகும். இந்த அமைப்பில். தொடர்ந்து பல இளைஞர்கள் பங்கு பெற்று உடலுழைப்பையும், பொருள் உதவிளையும் வழங்கி வந்துள்ள காரணங்களால்தான்; பதினெண் சித்தர்மடத்தில் ஏடுகளிலிருந்து எடுத்து எடுத்து எழுதப்பட்டு எழுத்துமங்கியும், தாள் நைந்தும் சிதைந்தும் அழிந்து கொண்டிருக்கக்கூடிய தமிழ்மொழியின் இலக்கியச் செல்வங்கள் பாதுகாக்கப்படும் பணியும், வெளியுலகத்துக்கு அறிமுகப்படுத்தும் பணியும் நிகழ்ந்து வருகின்றன.

2. பதினெண் சித்தர்களின் படைப்புக்களால் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கு வகை வாழ்வியல்களும் செம்மைப்பட்டு உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு உருவாகிடும். அதன் மூலம் அருளுலகப் பொருளுலக இருள்களும், இன்னல்களும், இடுக்கண்களும், கறைகளும், குறைகளும், பெருமளவில் அகற்றப்பட்டிடும், அதற்கு, பதினெண்சித்தர்கள் தருகின்ற வரலாறு, மொழி, இனம், மதம், நாடு, இலக்கியம், மருத்துவம், கவின்கலைகள், ஆயகலைகள், அருட்கலைகள், வானியல், மானுடவியல், .... முதலியவை பற்றிய செய்திகள் உலக மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு பரப்பப்பட்டாக வேண்டும். இன்றைய நிலையில் குமரிமுதல் வட இமயம் வரை இந்துமதம் யாண்டும் பரவியுள்ள இந்துமத இந்தியாவின் நல்வாழ்வுக்குரிய சாதனைகள் பதினெண் சித்தர்களின் படைப்புக்கள் மூலம் சாதித்துக் காட்டப்பட்டாக வேண்டும். அதற்காகத்தான், இம்மண்ணுலகின் முதல் மொழியாகவும் மூலமொழியாவும் விளங்குகின்ற அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்பதினெண்சித்தர்களின் படைப்புகள் விரைந்து விரிந்து வெளியிடப்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இப்பணியை முன் நின்று செய்து வரும் இந்து இலக்கியக் கழகத்துக்கு எல்லோரும் தங்களால் இயன்ற உதவிகளை நல்க வேண்டும் என்று அறிவித்துக் கொள்கிறோம். இந்த இந்து இலக்கியக்கழகம் மாபெரும் வெற்றியினைப் பெறட்டும் என்று வாழ்த்துகிறோம்.

ஞானாச்சாரியார், இந்துவேத பீடம்

# பதிப்புரை

இந்த இந்து இலக்கியக்கழகம் இளைஞர்களாலேயே உருவாக்கப்பட்டு ஒரு சில பெரியவர்களின் துணையோடு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இது 'இந்துமத இலக்கியக் கழகம்' என்றோ அல்லது 'இந்து வேத இலக்கியக் கழகம்' என்றோ அல்லது 'இந்துக்களின் இலக்கியக் கழகம்' என்றோ பெயரிடப்பட வில்லை. இதனை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். ஏனென்றால், பதினெண்சித்தர்கள் 'இந்து' என்ற, பொருளாழமிக்க அழகிய இனிய தூய செந்தமிழ்ச் சொல்லின் பெயராலேயே தங்களுடைய அருட்கொடைகள் அனைத்தையும் வழங்கியிருக்கிறார்கள். எனவேதான், அவர்கள் அருளுலகுக்கு வழங்கியுள்ள போதனைகளையும் சாதனைகளையும், பொருளுலகுக்கு வழங்கியுள்ள அறிவியல்களையும் கலைகளையும் உலகம் உணரும்படிச் செய்வதற்காகத் தோற்றுவிக்கப் பட்டுள்ள இந்தக் கழகம் 'இந்து இலக்கியக்கழகம்' என்ற பெயரில் உருவாகி இயங்கிவருகிறது.

இன்றைய பதினெண்சித்தர் பீடாதிபதியும் மடாதிபதியும் கருகுல ஆதீனமுமான ஞானாச்சாரியார், இந்துவேத பீடம், இந்துமதத் தந்தை, இந்துமதத் தலைமை ஆச்சாரியக் குருபீடம் குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் பாரம்பரியமாக வருகின்ற செவி வழிச் செய்திகள்; ஏட்டறிவுச் செய்திகள் பட்டறிவுச் செய்திகள்; முதலியவைகளை தமது சித்தரடியான்கள். சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் முதலியோர்களுக்கு வெளியிட்டுவருகின்றார். இப்படி இவர் வெளியிட்டுவருபவைகளை உலகம் முழுதும் பரப்பவேண்டும் என்ற நோக்கில்தான் இந்த இந்து இலக்கியக் கழகம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

இக் கழகம், இதுவரை பொதுமக்களுக்குப் பதினெண்சித்தர்களின் அருளுலக பொருளுலக் கொடைகளை அறிவித்துத் தேவையான ஆதரவுகளையும் உதவிகளையும் பெற்று பதினெண்சித்தர்களுடைய அருளுலகப் போதனைகளையும், சாதனைகளையும், பொருளுலக அறிவியல்களையும், கலைகளையும் உலகோர் முறையான கல்வியாகக் கற்றிடுவதற்காகப் பள்ளிகளையும், கல்லூரிகளையும் தனிப்பட்ட ஒரு பல்கலைகழகத்தையும் உருவாக்குவதற்காகத்திட்டமிட்டே உழைத்துவருகிறது. இந்தக்கழகம், அதற்காக இன்றுவரை ஆயிரத்து ஐநூறுக்கும் (1500) மேற்பட்ட அச்சிட்ட அறிக்கைகளையும், அறிவிக்கைகளையும், வெளியிட்டிருக்கிறது. இவற்றுக்கெல்லாம் மேலாக சிறிய பெரிய அளவில் நூறு நூல்களுக்கும் மேல் வெளியிட்டிருக்கிறது. இருந்தும் எதிர்பார்த்த பயன் ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவில்லை, ஏற்படவேயில்லை.

இவற்றையெல்லாம் எண்ணித்தான், இப்பொழுது இந்த இந்து இலக்கியக்கழகம் பதினெண்சித்தர்களுடைய அருளியல் கருத்துக்களால்தான் உலகோரைத் தட்டியெழுப்பமுடியும் என்று முடிவெடுத்து இந்து வேதம் பற்றிய நூல்களையும்; இந்து வேதத்தின் செயல் வடிவமான இந்துமதம் பற்றிய நூல்களையும் வெளியிட முன் வந்திருக்கிறது. இத்துடன் பதினெண்சித்தர்கள் செயல்பட்டிட்ட முதல் நிலமான இத் திருநாட்டில் பதினெண்சித்தர்களின் சாதனைகளையும், போதனைகளையும் விளக்கிட இந்துவேத மாநாடு எல்லா வட்டாரங்களிலும், மாவட்டங்களிலும் நிகழ்த்திட முன் வந்திருக்கிறது இக்கழகம். இதன் மூலமாவது, சாதி, மதம், மொழி, இனம், நாடு என்ற அடிப்படையில் உள்ள அனைத்து வகையான வெறிகளையும், சண்டைச் சச்சரவுப் போராட்ட வெறிகளையும் அகற்றிட முயலுகிறது இக்கழகம். இதற்கு அனைவரின் ஆதரவும் வேண்டப்படுகிறது.

— இந்து இலக்கியக்கழகம்.




முதற்பதிப்பு : ஆவணி (செப்டம்பர்) 1991.

முதல் இந்து வேத மாநாட்டுச் சிறப்பு

வெளியீடு - தஞ்சை.



தொடர்பு : இந்துவேத நாயகம்,

இந்துமதத் தந்தை,

பதினெண்சித்தர்மடம்,

காரணை, சென்னை — 67




# இந்து வேதம்

## (ஒரு சுருக்க விளக்கம்)

1) இந்து வேதம்' என்ற பொருளாழம் மிக்க ஓர் அழகிய இனிய செந்தமிழ்ச் சொல். இம்மண்ணுலகில் **இந்து** என்ற சொல்லுக்கு ஆரம்ப காலத்திலேயே 48 முதல் 108 சொற்களில் நேரடியான பொருள் விளக்கம் தரப்பட்டிருக்கின்றது. கடந்த நான்கு யுகங்களில், இந்த **இந்து** என்ற ஒரே சொல்லுக்கு நேரடிப் பொருள் கூறும் சொற்களாக ஆயிரக்கணக்கான சொற்கள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன அல்லது அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

2) இந்த 'இந்து வேதம்', இந்த மண்ணுலகம் தோன்றுவதற்கு முன்னரே கணக்கற்ற கோடிகோடி ஆண்டுகளாக அண்டங்கள், பேரண்டங்கள் அண்ட பேரண்டங்கள் எனும் அனைத்திலும் நன்கு பரவி, வேரூன்றி, வளர்ந்து, வளப்பட்டு, வலிமைப்பட்டு, பொலிவுபெற்ற ஒன்றாகும்.

3) இந்த 'இந்து வேதம்' அண்ட பேரண்டங்களை ஆளுகின்ற மூலப்பதினெண்சித்தர்கள், மூலப் பதினெட்டம்படிக் கருப்புகள், 48 வகைப்பட்ட கடவுள்கள், 48 வகை வழிபடுநிலையினர்கள், 48 வகைச் சித்தர்கள் ... முதலியவர்களால் காலங்கள் தோறும் ஏற்படக் கூடிய புதியபுதிய தேவைகளுக்கேற்பத் தேவையான மாற்றங்களையெல்லாம் செய்யப்பட்டு புதுப் பிக்கப்பட்டு வருகின்ற ஒன்றாகும். எனவேதான், அண்டங்கள், பேரண்டங்கள், அண்டபேரண்டங்கள் என்பனவற்றிலுள்ள எல்லா வகைப்பட்ட உலகங்களிலும்;

இந்த 'இந்து வேதமதமான இந்துமதம்' ஒன்றேநிலையாக இருந்து வருகின்றது. ஆனால், அவ்வப்பொழுது. அந்தந்த உலகங்களின் சூழ்நிலை மாற்றங்களுக்கேற்ப, துணை மதங்கள் சில இந்த இந்து வேதமதமான இந்துமதமெனும் ஆலமரத்தின் புதியபுதிய இலைகளாகவும், கிளைகளாகவும், விழுதுகளாகவும், தோன்றுவதுண்டு. ஆனால் மிகவிரைவில் அவைகளனைத்தும்; தாங்கள், இந்து மதத்தின் ஓர் அங்கம்தான் என்பதை உணர்ந்து இந்துமதத்தோடு ஐக்கியமாகிவிடுகின்றன. அதாவது இந்துவேதமதமான இந்துமதம் தவிர வேறு எந்த ஒரு புதிய மதம் தோன்றினாலும்; அது குறிப்பிட்ட கால அளவுக்கு மேல் தனிப்பட்ட ஒரு மதமாகத் தனித்து இயங்காமல் இந்துவேதமதமான இந்துமதத்தோடேயே இணைந்துவிடும் என்பதுதான் அருளுலக வரலாறு.

4) '' 'இந்து' என்ற சொல் தருகின்ற செய்திகள், 'வேதம்' என்ற சொல்லால் மட்டுமே சிறப்பாகக் குறிக்கப்படுவதுதான்'' மரபாக இருக்கிறது. இந்த உண்மையை, விளக்கிட;

'இந்துவேதமதமான இந்துமதம்'
'இந்துமதத்தின் இந்துவேதம்'
'அண்ட பேரண்டமாளும் இந்துவேதம்'

'அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு தெய்வீகச் செந்தமிழ் நிலையாக என்றென்றும் வாழும் இந்துவேதம்'

'அருளுலகைப் பற்றிய மெய்யான செய்திகளைத் தருகின்ற இந்துவேதம்'

'கடவுள்களாலேயே காலங்கள் தோறும் மக்களுக்கு நேரடியாகவே வழங்கப்படும் இந்துவேதம்'



'மனிதன் கடவுளைச் சந்தித்திட வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாக இருக்கின்ற இந்துவேதம்'

'மனிதர்களுக்குத் தேவையான போது கடவுளர்களே நேரில் வந்து உதவி செய்திடச் செய்யும். வேதம் இந்துவேதம்'

'மனிதர்கள் கடவுளாகிடுவதற்கு உதவும் இந்துவேதம்'

'கடவுளர்கள் பிறக்கிறார்கள் இறக்கிறார்கள், பிறப்பிறப்பற்ற பெருநிலை பெறுகிறார்கள் எனும் முப்பெரும் அருளுலக உண்மைகளைத் தெளிவாகவும், எளிமையாகவும், விளக்கிக்கூறும் இந்துவேதம்'

'கடவுள்களில் மண்ணுலகக் கடவுள்கள், மண்ணுலகு கடந்த ஏழுலகக் கடவுள்கள் (விண்ணுலகக் கடவுள்கள்) என்று கடவுள்களில் இருபெரும் வகையினர்கள் இருக்கின்றார்கள் பேருண்மையை விளக்குகின்ற இந்துவேதம்'

'கடவுள்களில் தாங்களாகவே தோன்றுகின்ற கடவுள்கள் என்றும்; அருளாற்றல் மிக்கவர்களால் தோற்றுவிக்கப் படுகின்ற கடவுள்கள் என்றும் இருபெரும் வகையினர் உண்டு என்ற பேருண்மையினை மிகமிகத் தெளிவாகவும், எளிமையாகவும், விளக்கமாகவும் கூறுகின்ற இந்துவேதம்'

'மனிதர்களை அடிக்கடி நேரில் வந்து, பார்த்துப் பாதுகாத்து வழிநடத்துபவர்களே கடவுள்கள் என்று கூறும் இந்துவேதம்'

'பேரார்வத்தினால் முறையான பயிற்சிகளையும், நிறைவான முயற்சிகளையும் தக்க குருவழியாகச் செய்து சத்தி, சித்தி, முத்தி, பெறுபவர்களின் விருப்பத்திற்கேற்ப அவர்கள் கண்டுகளித்திடக் காட்சி தருபவர்களே கடவுள்கள் என்று கூறும். இந்துவேதம்'

'பதினெண் சித்தர் பீடாதிபதிகளின் அருளுரைகள், அருளார்ந்த அருளுரைகள், அறிவுரைகள், அறிவார்ந்த அருளுரைகள் எனும் நான்கினுக்குள் அடங்குபவர்களே மெய்யான கடவுள்கள் என்று கூறும் இந்துவேதம்'

'' கடவுள்களில் ஆண், பெண், அலி என்ற மூன்று பெரும் வகைப்பட்ட வெவ்வேறான நிலைகளை உடைய கடவுள்கள் இருக்கின்றார்கள் என்ற பேருண்மையினை மிகமிகத் தெளிவாகவும், எளிமையாகவும், விளக்கமாகவும் கூறுகின்ற இந்து வேதம்''.

''கடவுள்களில் 48வகையினர்கள் தர, திர, திறங்களுக்கேற்பப் பிரிக்கப் பட்டிருக்கிறார்கள் என்ற பேருண்மையினை நறுக்குத் தெரித்தாற்போல் பிசிறின்றி மிகமிகத் தெளிவாகவும், எளிமையாகவும், விளக்கமாகவும் கூறுகின்ற இந்து வேதம்''

'' கடவுள்கள் மனிதர்களுக்கு முதலாளிகளோ அரசர்களோ அல்ல; அவர்கள் மனிதர்களுக்குத் தாய் போன்றவர்கள் என்று கடவுள்களின் உண்மையான நிலையினை மிகமிகத் தெளிவாகவும், எளிமையாகவும், விளக்கமாகவும் கூறுகின்ற இந்து வேதம்''

''எந்தெந்த நாட்டில், எந்தெந்த இனத்தவருக்காக எந்தெந்த மொழியில் எந்தெந்த கடவுள் வேதத்தைக் கூறுகிறாரோ; அந்தந்த கடவுளும் வேதமும் அந்தந்த நாட்டுக்கும், மொழிக்கும், இனத்துக்கும் மட்டுமேதான் உரியன என்று மிகமிகத் தெளிவாகவும், எளிமையாகவும், விளக்கமாகவும் கூறுகின்ற இந்து வேதம்''

''குறிப்பிட்ட கடவுளும் வேதமும் குறிப்பிட்ட நாட்டுக்கும் மொழிக்கும், இனத்திற்கும் தான் உரியவை என்ற பேருண்மையை விளக்குகிற இந்து வேதம்''



''ஆவி, ஆன்மா ஆருயிர் என்ற மூன்றும் இணைந்து உருவாகும் சிவனின் வடிவமே இலிங்கம்' என்ற பேருண்மையை நேரடியாக, எளிமையாக விளக்குகின்ற இந்து வேதம்'

''ஒவ்வொரு மனிதனின் வாழ்வும்முற்பிறப்பு, மறுபிறப்பு, இப்பிறப்பு என்ற முக்கோண பீடத்துக்கு உட்பட்டே இயங்குகிறது' என்ற பேருண்மையினைத் தெளிவாகவும், நேரடியாகவும் விளக்குகின்ற இந்து வேதம்'

...என்றிப்படி இந்து வேதம் பற்றிய கருத்து விளக்கச் சொற்றொடர்கள் பதினெண் சித்தர்களின் நூல்களிலும், பதினெட்டாம்படிக் கருப்புகளின் நூல்களிலும், 48வகைச் சித்தர்களின் நூல்களிலும், பதினெண் சித்தர் பீடாதிபதிகளின் குருபாரம்பரியம், இலக்கியபாரம்பரியம், அரசபாரம்பரியம் எனும் முப்பெரும் இலக்கியங்களிலும் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஏராளமாகக் காணப்படுகின்றன, ஏராளமாகக் காணப்படுகின்றன. எனவேதான் இந்து மதத்தைப் பொறுத்தவரை '**இந்து வேதம்**' என்ற சொல்லே இந்து மதத்தின் கொள்கைகளையும், குறிக்கோள்களையும், செயல் நடை முறைகளையும் விளக்குகின்ற ஒரு சொல்லாக இருக்கின்றது.

5. அனைத்து வகைப்பட்ட சித்தர்களின் நூல்களிலும் 'இந்து மறை', 'இந்து முறை', 'இந்து நெறி', 'இந்து சுருதி', 'இந்து ஆரணம்' 'இந்து ஆகமம்', 'இந்து மீமாம்சை', 'இந்து நாதம்' 'இந்து சித்தம்', இந்து ஓதம்', 'இந்து போதம்', ... என்ற சொற்கள் அரிதாக விரல்விட்டு எண்ணக் கூடிய அளவிலேயே மிகமிகச் சிலவாகத்தான் காணப்படுகின்றன. இருந்த போதிலும், "இந்த **இந்து** என்ற சொல் பதினெண் சித்தர்களுடைய அனைத்து

வகையான அருளுலகக் கொள்கைகளையும், கோட்பாடு-களையும், குறிக்கோள்களையும் மொத்தமாகக் குறிக்கக் கூடிய ஓர் உயர் தனிச் செந்தமிழ்ச் சொல்லாகும்' என்ற பேருண்மையை இங்குப் பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ள சொற்கள் உணர்த்துகின்றன.

6. வேதம் என்ற சொல், 'வேதித்தல்' அதாவது சமைத்தல், சமைத்துப்பதப்படுத்தப்பட்ட ஒன்று அல்லது சமைத்துப்பக்குவப்படுத்தப்பட்ட ஒன்று ... என்ற பொருளைத் தருவதாகும். பதினெண் சித்தர்களின் அருளுலகப் படைப்புக்களில் 'நான் மறை', 'நான்முறை', 'நானெறி', 'நான் வேதம்' எனும் பதினொறும் மிகமிக அடிப்படையான இலக்கியங்களாக இருக்கின்றன. இருந்-தாலும் **நான்மறை** என்ற நான்கு இலக்கியங்களும் குறிப்-பிட்டவரன்றி மற்றவரறியா வண்ணம் மறைத்துக் காக்-கப்பட வேண்டியவையாகவே அறிவிக்கப் பட்டிருக்கின்-றன. **நானெறி** என்பவை குரு, குருக்கல், குருமார், பூசாரி எனப்படும் நால்வரும் மற்றபடி தவம், ஞானம் ... முதலியவைகளைச் செய்யக் கூடிய அருளாளரும் எப்படி யெப்படி வாழ வேண்டும் என்ற ஒழுகலாறுகளை, வாழ்வி-யல்களை, சட்டதிட்டக் கட்டுப்பாடுகளை விளக்குவன-வாகும். **நான்முறை** என்பவை பதினெண் சித்தர்களு-டைய அருளுலகச் செயல்பாட்டு விதிகள், அவற்றின் விளக்கங்கள், அவற்றின் பயன்கள் அவை சார்ந்த அருளு-லகப் பொருளுலக நடைமுறைகள், ... முதலியவைகளையே விளக்குவனவாகும். **நான் வேதம்** என்பதில், இருடி வேதம், அசுரவேதம், யாம வேதம் அல்லது சாம வேதம், அதர்வான வேதம் என்ற நான்கு பகுப்புக்கள் இருக்கின்-றன. இவற்றிலுள்ள பூசை மொழிகள் நான்கு வகைப் பட்ட அருளாற்றல்களை வழங்கிடுபவையே ஆகும். இவை தான், அருளை அநுபவப் பொருளாகப் பெற்றுச் செயல்



படக் கூடிய அருளாளர்களை உருவாக்கி; அவர்களை, அரு-ளுலகுக்குரிய சான்றுகளாகவும், ஊன்றுகளாகவும் வெளி உலகுக்கு வழங்குவனவாக இருக்கின்றன. எனவேதான், இந்த '**வேதம்**' என்ற சொல் 'பதினெண் சித்தர்களுடைய அருளுலகப் போதனைகளையும், சாதனைகளையும் குறிப்பாக விளக்கக் கூடிய' சிறப்பான சொல்லாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. இதன்படியே, பதினெண் சித்தர்கள் தங்களுடைய கொள்கை, குறிக்கோள், கோட்பாடு ... முதலிய அனைத்தையுமே குறிக்கக்கூடிய பொருள்வளமும், பொருளாழமும் உடைய அழகிய இனிய செந்தமிழ்ச் சொல்லான 'இந்து' என்ற சொல்லுடன் இந்த 'வேதம்' என்ற சொல்லைச் சேர்த்து '**இந்து வேதம்**' என்ற பெயர்ச் சொல்லை உருவாக்கினார்கள். இருந்தபோதிலும், 'இந்த இந்து வேதத்தால் உருவான மதத்திற்கு **இந்துமதம்** என்றே பெயர் வைக்கப்பட்டது. இந்து வேதமதம் என்று பெயர் வைக்கப்படவில்லை. ஏனென்றால் இந்து என்ற சொல்லிற்கே அதிக முதன்மைத்துவம் தரப்படுவது மர-பாக இருக்கிறது'. இதனுடைய நேரடியான விளக்கத்தை 'இந்து வேதத்தைப்' பின் பற்றக்கூடிய மக்களுக்கு 'இந்து வேத மக்கள்' என்று பெயரிடாமல் '**இந்துக்கள்**' என்றே பெயர் வைக்கப் பட்டிருப்பதன் மூலம் தெரிந்து கொள்ள-லாம். இப்படி இந்து என்ற சொல்லுக்கு விளக்கங்களைத் தருகின்ற ஏடுகளிலெல்லாம் பெரும்பாலும் ஆரம்பத்தி-லும், முடிவிலும் 'இந்து மதத் தந்தை', 'இந்து வேத நாயகம்', 'இந்து வேதபீடம்', 'இந்து வேதத் தலைமை ஆச்சாரியமடம்', 'பதினெண் சித்தர் மடம், பீடம்', 'ஞானச்சாரியார்', ... முதலிய அருட்பட்டங்களில் சில-வாவது அல்லது முழுதுமாவது தவறாமல் குறிக்கப்படு-கின்றன.

7. 'இந்து மத வரலாறு', 'இம்மண்ணுலகில் இந்து மதம் தோற்றுவிக்கப்பட்ட இடம் காலம்', 'இந்து மதத்தின் அடிப்படையான உயிர்நாடியான இந்து வேதம்' 'இந்து வேதத்தின் 108 பூசை மொழி நூல்கள்', இந்து வேதத்தின் 48 பூசை விதி நூல்கள்', 'இந்து வேதத்தின் 96 தத்துவ நூல்கள்', 'இந்து வேதத்தின் 144 செயல் சித்தாந்த நூல்கள்', 'இந்து வேத அருளாளர்கள்', 'இந்து வேதக் கடவுள்கள்', 'இந்து வேதக் கோயில்கள்', 'இந்து வேதக் கருவறைகள்', 'இந்து வேதக் சலைகள்',... முதலியவை அனைத்தும் அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் தானிருக்கின்றன என்ற பேருண்மையும்', தமிழர்கள்தான் அருளுலகின் மூலவர்கள், காவலர்கள், தத்துவ வித்துக்கள், செயல் சித்தாந்த நாற்றுக்கள், ... என்ற பேருண்மையும் குறைக்கப்பட்டு மறைக்கப்படலாம், குறைக்கப்பட்டு மறைக்கப்படலாம், குறைக்கப்பட்டு மறைக்கப்படலாம். அதனால், அநாதி காலத்து மதமான, இந்துமதம் அனாதையாக்கப்பட்டுவிடலாம், அனாதையாக்கப்பட்டுவிடலாம், அனாதையாக்கப்பட்டுவிடலாம் ... என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான், பதினெண் சித்தர்கள் இந்து வேதத்தை என்றென்றைக்கும் தலைமைதாங்கிக் காத்து வழிநடத்தும் பொறுப்பினைப் பதினெண் சித்தர் மடத்திடம் ஒப்படைத்தார்கள், ஒப்படைத்தார்கள், ஒப்படைத்தார்கள்.

8. பதினெண் சித்தர்கள், இம்மண்ணுலக முடிவுக்குள் ஏற்படக் கூடிய நான்கு யுகங்களிலும் வாழையடி வாழையென வரக்கூடிய பதினெண் சித்தர்களின் மரபில் மட்டுமே பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தோன்றிப் பதினெண் சித்தர் மடத்தைத் தங்களுடைய வசதி வாய்ப்புக்களுக் கேற்பத் தமிழகத்தின் ஏதேனும் ஒரு பகுதியில்



உருவாக்கி 'இந்து மறுமலர்ச்சிக்காக', 'இந்து வேத வள வளர்ச்சிக்காக', 'இந்து மத ஆட்சி மீட்சிக்காக', இந்துக்களின் விழிச்சிக்காக! எழிச்சிக்காக! செழிச்சிக்காக!',... எல்லாவகையான செயல்களையும் மேற்கொண்டிடுமாறு திட்டம் செய்து சென்றிருக்கிறார்கள். இதில், மாற்று வேதங்களையோ அல்லது மாற்று மதங்களையோ, அல்லது வேற்று மத மக்களையோ நகைத்தோ! எதிர்த்தோ! பகைத்தோ! இழித்தோ!, அழித்தோ!, பழித்தோ!, ... எந்தவித கருத்தோ உணர்வோட்டமோ ஊசி முனையளவு கூட இல்லை, ஊசிமுனையளவு கூட இல்லை, ஊசிமுனையளவு கூட இல்லை, ஊசிமுனையளவு கூட இல்லவே இல்லை என்பதே குறிப்பிடத்தக்கது. இதுவே, பதினெண் சித்தர்களுடைய, அருளுலகப் போதனைகளுடைய மேம்பாடுகளையும், சாதனைகளுடைய செம்மை நிலைகளையும் வெளிப்படுத்தும்.

9. **இந்துவேதம்** கணக்கற்ற தனித்தனிப் பிரிவுகளை உடையதாகும். அதாவது, அருளுலகப் பொருளுலக வாழ்வியலுக்குத் தேவையான அனைத்து வகைப்பட்ட செய்திகளும் மிகமிகத் தெளிவாக வரையறுக்கப் பட்ட தனித்தனித் துறைகளாகப் பிரித்து வகுத்து வழங்கப் பட்டிருக்கின்றன. இவற்றுக்குள், அடங்காத உணர்வுகளோ, எண்ணங்களோ, கருத்துக்களோ, செயல்களோ, செய்திகளோ எதுவுமே இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை!; இருக்க முடியாது, இருக்க முடியாது, இருக்க முடியாது, இருக்க முடியவே முடியாது. எனவேதான், இந்த **இந்துவேதம்** அல்லது 'இந்த இந்து வேதமதமான இந்து மதம், ஒரு சமுதாய இயலே ஆகும்' என்று பதினெண் சித்தர்களால் மிகத் தெளிவாகப் பல இடங்களில் எழுதப்படுகிறது. மேலும் பதினெண் சித்தர்களே; ''இந்த இந்து **வேதமே** இந்த உலகில் தோன்றக் கூடிய

அனைத்து வேதங்களுக்கும் விதைப் பண்ணையாக நாற்றுப் பண்ணையாக என்றென்றும் இருந்திடும்'' என்று மிகமிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் பல இடங்களில் எல்லா நூல்களிலும் குறிப்பிடுகிறார்கள். இதுபற்றி, பத்தாவது, பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதிகள் விளக்க மளிக்கும் பொழுது; '**இந்து வேதம்** இம்மண்ணுலக வேதங்களுக்கெல்லாம் தாயாகவும், மூலமாகவும், முதலாகவும், அடிப்படையாகவும், உள்ளீடாகவும், உயிராகவும் விளங்குகிறது'; எனவேதான், 'இந்த, இந்து மதத்தில் மதமாற்றம் பற்றிய கருத்தோ, சிந்தனையோ, எள் முனையளவு கூட இல்லை, இல்லை, இல்லை, இல்லவே இல்லை' என்று மிகத் தெளிவாகக் குறிக்கிறார்கள். அதாவது, பெயரளவில் இம்மண்ணுலகில் எத்தனை மதங்களிருந்தாலும் சரி, எத்தனை எத்தனைக் கோயில்களும், வழிபாட்டு முறைகளும் தோன்றினாலும் சரி அனைத்தும் இந்து வேதத்துக்குட்பட்டவைதான் என்ற கருத்தையே பதினெண் சித்தர்கள் அழுத்தந்திருத்தமாக, ஆணித்தரமாகக் கூறுகிறார்கள், கூறுகிறார்கள், கூறுகிறார்கள். எனவேதான், **இந்துமதம்**, யாண்டும் பரவியுள்ள இந்துமத இந்தியாவிற்குள் எத்தனை எத்தனை அன்னிய வேத மதங்கள் வந்து என்னென்ன கடுமைகளையும், கொடுமைகளையும் சிதைவுகளையும், சீரழிவுகளையும் செய்திட்டாலும் அவற்றோடு நிலையான போட்டி பொறாமைப் போராட்டங்களையோ, பகைமைப் போர்களையோ உருவாக்காமல் வாழுகிறது.

10. இப்படி **இந்து** வேதமதமான இந்துமதம் எந்த அன்னிய மதத்தோடும் வேற்றுமையையோ, போட்டி பொறாமையையோ, சண்டை சச்சரவுகளையோ, கடும்போர்களையோ, நெடும் போரட்டங்களையோ வளர்த்துக் கொள்ளாத ஒன்றாக இருக்கின்ற பண்பினால் காலங்கள் தோறும் இந்து மதத்திற்கு நலிவும், மெலிவும், சிதைவும், சீரழிவும் தோன்றுவது இயற்கையாகிவிட்டது.



ஆனால். இந்த நலிவும், மெலிவும், சிதைவும், சீரழிவும் ஒரு குறிப்பிட்ட எல்லையைக் கடந்து பதினெண் சித்தர்களுடைய அண்டபேரண்டமாளும் இந்து வேதமதமான இந்து மதத்தைப் பெருமளவில் பாதிக்கும் நிலை வந்தவுடனே இந்து வேதத்தின் 48வகைப்பட்ட கடவுள்களும், 48 வகைச் சித்தர்களும், 48 வகை வழிபடுநிலையினர்களும், மற்ற அருளுலகத்தவர்களும் நேரிலேயே வந்து செயல்பட ஆரம்பித்திடுவார்கள். மேலும் தங்களுடைய நேரடி வாரிசுகளையும், திருத்தோன்றல்களையும், பத்தியாளர்களையும், சத்தியாளர்களையும், சித்தியாளர்களையும், முத்தியாளர்களையும், சித்து விளையாடல்காரர்களையும் தேவைக்கேற்ப நாடு முழுவதும் தோன்றச் செய்து செயல்படச் செய்திடுவார்கள். இவையனைத்தும் கணிசமான அளவு வளர்ச்சி பெற்ற பிறகு பதினெண் சித்தர் மடம், பீடம், ... அனைத்துக்கும் தலைமை தாங்கி வழிநடத்திப் பொருளுலக அருளுலக இருளகற்றும் அருளாட்சியினை அமைத்திடும், அமைத்திடும், அமைத்திடும். இதுதான், **இந்துவேதம்** அண்டங்கள், பேரண்டங்கள் அண்டபேரண்டங்கள் அனைத்திலும் என்றென்றும் நிலைத்து நிற்பதற்குரிய நிலையான செயல்திட்டமாகும். இத்திட்டமே, அண்ட பேரண்டமாளும் பதினெண் சித்தர்களாலும், பதினெட்டாம்படிக் கருப்புகளாலும் உருவாக்கப்பட்டதாகும்.

11. இப்பேருண்மையின், அடிப்படையில் தான்; பதினெண் சித்தர்கள் தங்களுடைய '**இந்து** வேதமதமான இந்துமதம் பற்றிக் குறிப்பிடும் பொழுதெல்லாம்; 'அண்ட பேரண்டமாளும் பதினெண்சித்தர்களுடைய இந்துவேத மதமான இந்து மதம்' என்ற சொற்றொடரையே எழுதுகிறார்கள் பேசுகிறார்கள்; இதேபோல், பதினெண் சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியான தமிழ் மொழியைப் பற்றிக் குறிப்பிடும் பொழுதெல்லாம்; 'அண்ட பேரண்ட அருளுலக ஆட்சி மொழியான அருளூறு அமுதத் தெய்—

வீகச் **செந்தமிழ்** மொழி என்ற சொற்றொடரையே திரும்பத் திரும்பப் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள்', அதாவது, இந்துவேதமும், இந்து வேதமதமான இந்து மதமும், பதினெண் சித்தர்களுடைய தாய் மொழியான தமிழ் மொழியும் அண்டபேரண்டம் முழுவதும் நன்கு பரவியிருக்கக் கூடியவை என்ற பேருண்மையே மேலே குறிப்பிட்ட வாசகங்களால் தெளிவாக விளங்குகிறது.

12. இந்த, இந்துவேதம் பெரும்பாலும் எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடிய தெளிவான எளிமையான விளக்கமான அழகிய குறுகிய, நெடிய சொற்றொடர்களைக் கலந்து கலந்து எழுதப்பட்டதாகும். இதனால் அதிக மொழியறிவு இல்லாதவர்கள் கூட இந்து வேதத்தின் வாசகங்களைப் படித்துப் பொருள் கொள்ள முடிகிறது. இன்னும் சற்று விளக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், இந்து வேதத்தின் எல்லா நூல்களுமே பெரும்பாலும் உரைநடையில் தான் எழுதப்பட்டிருக்கின்றன. அதாவது, '**வேதம்** என்பது எல்லா வகைப்பட்ட மக்களாலும் எளிதில் படித்துப் பொருள் புரிந்து கொள்ளக் கூடிய ஒன்றாக இருக்க வேண்டும் என்ற கருத் தோட்டத்தில்தான் **இந்து வேதம்**' எழுதப் பட்டிருக்கிறது. இதன் மூலம், 'பதினெண்சித்தர்கள் தங்களுடைய இந்து வேதத்தை மானுட இன மேம்பாட்டுக்காகவேதான் தோற்றுவித்தார்கள்' என்ற பேருண்மை விளங்குகிறது.

13. '**இந்து வேதம்** என்று குறிக்கப்படுவது சிறப்பாகப் 'பூசை மொழிகள்', 'பூசைவிதிகள்', 'தத்துவங்கள்', 'செயல் சித்தாந்தங்கள்' என்ற நான்கு பெரும் பிரிவுகளை' உடையதாகும். அதாவது, பதினெண்சித்தர்களுடைய இந்து மதத்தில் இந்த நான்கு, நான்கின் மடங்குகளான எட்டு, பன்னிரண்டு, பதினாறு, முப்பத்திரண்டு, முப்பத்தாறு, நாற்பத்தெட்டு, அறுபத்தினான்கு,



தொண்ணூற்றாறு, நூற்றெட்டு, நூற்றிநாற்பத்தினான்கு, ஆயிரத்தெட்டு என்ற எண்ணிக்கைகளும்; ஐந்து, ஆறு, ஏழு, ஒன்பது, ஒன்பதின் மடங்குகளான பதினெட்டு, இருபத்தேழு, முப்பத்தாறு, ஐம்பத்தினான்கு, அறுபத்துமூன்று, எழுபத்திரண்டு, எண்பத்தொன்று, இருநூற்றி நாற்பத்துமூன்று, எழுநூற்றிருபத்தொன்பது, இரண்டாயிரத்து நூற்றிபென்பத்தேழு என்ற எண்ணிக்கைகளும் மிகச் சிறப்பாகப் பயன்படுத்தப் படுகின்றன.

14. இந்த உலகத்தை நான்கு வகைப்பட்ட நிலங்களாக 'குறிஞ்சி' (மலையும் மலைசார்ந்த இடமும்); 'முல்லை (காடும் காடு சார்ந்த இடமும்); 'மருதம்' (வயலும், வயல் சார்ந்த இடமும்); 'நெய்தல்' (கடலும், கடல் சார்ந்த இடமும் என்று நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள், பதினெண்சித்தர்கள். எனவேதான், இந்த உலகத்தை **நானிலம்** என்று பெயரிட்டார்கள். இதனடிப்படையிலேயே இந்து வேதத்தின் உறுப்புக்களை பூசை மொழி, பூசை விதி, தத்துவம், செயல் சித்தாந்தம் என்று நான்கு பகுப்புக்களாகப் பிரித்தார்கள். இதே, போல், இந்து வேதத்தின் செயல் வடிவமான இந்துமதத்தின் செல்வங்களை மறைகள், முறைகள், நெறிகள், வேதங்கள் என்று நான்காகப் பகுத்தார்கள். இதுமட்டுமின்றி இந்த நான்கிலுள்ள ஒவ்வொன்றையுமே நான்காகப் பகுத்து நான் மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள் என்று ஆக்கியிருக்கிறார்கள். இதேபோல், இந்து வேதத்தின் செல்வங்களாக அதாவது, இந்து வேதத்தைப் பயன்படுத்தி அருளை அநுபவப் பொருளாக விளைவித்துக் கொடுக்கக் கூடிய சாதனங்களாக நான்கு வகைப்பட்ட இலக்கியங்களை சுருதி, ஆரணம், ஆகமம், மீமாம்சை என்று படைத்திருக்கிறார்கள் இந்த நான்கும் இந்து வேதத்தின் அடிப்படைகளையும், உள்ளீடுகளையும்,

உயிரோட்டங்களையும் சாருக்கப் பட்டவைகளேயாகும்.
எனவேதான், இந்து வேதத்தின் செயல் வடிவமான இந்து
மதத்தின் செல்வங்களை மறை, முறை, நெறி, வேதம்
என்று நான்கு பெரும் பகுப்புக்களாகப் பகுத்து; அவை
ஒவ்வொன்றையுமே நான்மறை, நான்முறை, நானெறி,
நான்வேதம் என்று நான்கு உட்பகுப்புக்களாகப் பகுத்தது
போல; இந்த இந்து வேதத்தின் செல்வங்களான சுருதி.
ஆரணம், ஆகமம், மீமாம்சை எனும் நான்கையும்
'நான்கு சுருதிகள்' 'நான்கு ஆரணங்கள்', 'நான்கு ஆக-
மங்கள்', 'நான்கு மீமாம்சைகள்' என்று ஒவ்வொன்றை-
யும் நான்கு உட்பிரிவுகள் உடையதாகப் பகுத்திருக்கிறார்-
கள். அதாவது, இந்து வேதத்தின் செல்வங்களும் பதி-
னாறு பிரிவுகளை உடையவைகளாக அதாவது, பதினாறு
வகைப்பட்டவைகளாக உருவாக்கப் பட்டிருக்கின்றன;
இந்து வேதத்தின் செயல் வடிவமான இந்து மதத்தின்
செல்வங்களும்பதினாறுவகைப்பட்ட பிரிவுகளாக அதாவது,
பதினாறு வகைகளாக உருவாக்கப்பட்டிருக்கின்றன.

15. இப்படி இந்துவேதம் பதினாறு வகைப்பட்ட
செல்வங்களைப் பெற்றிருப்பதைத்தான் கல்வி கற்கின்ற
இளைஞர்களை வாழ்த்தும் பொழுது; 'பதினாறும் கற்றுப்
பெருவாழ்வு வாழ்ந்திடு' என்று வாழ்த்தும் மரபு தோன்-
றிற்று. இதைப் போலவே, திருமணம் செய்து கொண்டு,
இல்லற வாழ்வைத் துவக்குகின்ற மணமக்களை வாழ்த்தும்
போது; இந்து மதம் பதினாறு வகைப்பட்ட செல்வங்களைப்
பெற்றிருப்பதை நினைவில் கொண்டுதான் 'பதினாறும்
பெற்றுப் பெரு வாழ்வு வாழ்ந்திடு' என்று வாழ்த்தும்
மரபு தோன்றிற்று. இப்படிக் **'கொள்கை வடிவிலி-
ருக்கின்ற** இந்து வேதத்தின்' செல்வங்களும்; **செயல்
வடிவிலிருக்கின்ற** இந்துமதத்தின் செல்வங்களும் அன்-
றாட வாழ்வியலின் நடைமுறைகளில் அடிக்கடி பசுமை-



யான நினைவில் நிற்கின்ற அளவிற்கு இந்து வேதமும்,
இந்து வேதமதமான இந்து மதமும் நாடு முழுவதும் நன்கு
விழிச்சியும், எழிச்சியும், மலர்ச்சியும், செழிச்சியும் உடைய
வளர்ச்சி நிலையினைப் பெற்றிருந்திருக்கின்றன, பெற்றிருந்-
திருக்கின்றன, பெற்றிருந்திருக்கின்றன. ஆனால், இன்-
றுள்ள **இந்து** மதத்தின் பாமர மக்களுக்கும் பத்தி, சத்தி,
சித்தி, முத்தி நிலைகளைப் பெற்ற மத வாழ்வினர்களுக்கும்,
மதத்தின் தலைவர்களான ஆச்சாரியார்கள், மடாதிபதிகள்,
பீடாதிபதிகள், தம்பிரான்கள், பண்டார சந்நதிகள்,
பண்டார சந்நிதிகள், சன்னிதானங்கள், ஆதீனங்கள், குரு
பீடங்கள் எனும் ஒன்பது பேர்களுக்கும் ஏறத்தாழ பதி-
னெண் சித்தர்களுடைய சித்தர் நெறியெனும் சீவ நெறி-
யின் பெயரான **இந்து** எனும் சொல்லும்; இந்துவேதம்,
இந்துவேதமதம், இந்துவேதமதமான இந்துமதம் எனும்
சொற்களும் அல்லது சொற்றொடர்களும் தெரியாதவை-
களாக இருக்கின்றன, தெரியாதவைகளாக இருக்கின்றன,
தெரியாதவைகளாக இருக்கின்றன, தெரியாதவைகளா-
கவே இருக்கின்றன; புரியாதவைகளாக இருக்கின்றன,
புரியாதவைகளாக இருக்கின்றன, புரியாதவைகளாக
இருக்கின்றன புரியாதவைகளாகவே இருக்கின்றன.
எனவேதான், இன்றைக்கு இந்து மதத்தை விரும்புகிறவர்
களும், நம்புகிறவர்களும் ஏறத்தாழ நூற்றுக்கு எத்தனை
பேர் என்று விரல் விட்டு எண்ணி விழுக்காட்டுக் கணக்குப்
போடும் நிலையே இருக்கிறது. இந்த நிலையை எண்ணிக்
கவலையுற்றுத்தான் **'இந்து'**, **'வேதம்'**, 'இந்து வேதம்',
'இந்துவேதமதமான இந்து மதம்', 'இந்து மதமக்களான
இந்துக்கள்', 'இந்துமத நம்பிக்கைகள்', 'இந்துமதக்
கோட்பாடுகள்', இந்துமதக் குறிக்கோள்கள்', 'இந்து
மதக் கோட்பாடுகள்', 'இந்துமதச் சம்பிரதாயங்கள்',
'இந்து மதத் திருநாள்கள்', 'இந்து மதத் திருவிழாக்கள்',

'இந்து மதக் கோயில்கள்', 'இந்து மதக் கடவுள்கள்', 'இந்து மதத்தலைவர்கள்', 'இந்துமதக் கலைஞர்கள்', 'இந்து மத அருளாளர்கள்', 'இந்துமத இலக்கியங்கள்', **'இந்துமத வரலாறுகள்'**,... முதலிய சொற்களுக்கு விளக்கங்களும்', இச்சொற்கள் குறிக்கின்ற பொருள்களுக்கு விளக்கங்களும் வழங்கப்படும் பணி இன்றுள்ள பதினெண் சித்தர் மடத்தால் துவக்கப்பட்டிருக்கிறது, துவக்கப்பட்டிருக்கிறது, துவக்கப்பட்டிருக்கிறது.

16. இப்படி, இன்றுள்ள பதினெண்சித்தர் மடம் துவக்கியுள்ள அறிவார்ந்த அருட் பணிதான் அருளுலகப் பொருளுலக இருள்களை அகற்றும். அப்பொழுதுதான் இந்துமதம் தனது ஆழ்ந்த தூக்க! ஏக்க! வீக்க! முடக்க! அடக்க!, ஒடுக்க!, நடுக்க!, ... நிலைகளிலிருந்து விடுபட்டிடும், விடுபட்டிடும், வ்டுபட்டிடும். ஏனென்றால், பதினெண் சித்தர் மடம்தான், இந்து மதத்தின் தலைமை மடமாக, தலைமைக் குரு பீடமாக, குவலய குருபீடமாக, இந்து வேத பீடமாக, இந்துவேத நாயகமாக, இந்து மதத்தந்தையாக, இந்து மதத்தலைமை ஆச்சாரியாராக, இந்துமத மூலப்பண்டாரமாக, இந்து மத மூலப் பண்டார சந்நதியாக, இந்துமத மூலப் பண்டார சந்நிதியாக், இந்துமத மூலத் தம்பிரானாக, இந்துமத மூல ஆதீனமாக, இந்து மத மூலக் குருமகா சன்னிதானமாக, ... அறிவிக்கப்பட்டிருக்கிறது, அறிவிக்கப்பட்டிருக்கிறது, அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிவிப்பு, இந்து மதத்தை இம் மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண் சித்தர்களாலும், பதினெட்டாம் படிக்கருப்புகளாலும் வழங்கப்பட்டதாகும். எனவேதான் இன்றுள்ள பதினெண் சித்தர் மடம் (காரணை, சென்னை-67) தனியொரு நிறுவனமாக இருந்தே மேலே குறிப்பிட்ட இந்து வேதத்திற்கும், இந்து



மதத்திற்கும் உரிய அனைத்துத்துறைகளின் அல்லது அனைத்துப் பிரிவுகளின் அல்லது அனைத்து வகைப்பட்ட அங்கங்களின் மறுமலர்ச்சிக்காகவும், வளவளர்ச்சிக்காகவும், வலிமைச் செழிச்சிக்காகவும், ஆட்சிமீட்சிக் காகவும், பாடுபடப் புறப்பட்டிருக்கிறது, பாடுபடப் புறப்பட்டிருக்கிறது, பாடுபடப்புறப்பட்டிருக்கிறது. இப் பேருண்மையினை இன்றுள்ள இந்துக்களில் கணிசமானவர்களாவது முறையாகவும், நிறைவாகவும் தெரிந்து, ஆராய்ந்து, அறிந்து, புரிந்து, தெரிந்து, உணர்ந்து, நம்பி, ஏற்றுத் தாங்களால் இயன்ற துணைகளையும், ஏந்துக்களையும், ஆதரவுகளையும், ... நல்கிட முன்வந்தாலேயே போதும், போதும், போதும்.

17. இந்த **இந்துவேதம்** அம்மண்ணுலகுக்கு அண்ட பேரண்டங்களிலிருந்து வந்த மூலப்பதினெண் சித்தர்களாலும், மூலப்பதினெட்டாம்படிக் கருப்புகளாலும் அனாதிக்காலம் எனப்படும் (4, 85, 920) நான்கு லட்சத்து என்பத்தையாயிரத்து தொள்ளாயிரத் திருபது ஆண்டு காலம். விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த மனிசர்களுக்கு வழங்கப்பட்டதாகும். அதாவது, இன்றைக்கு 1991க்கு நாற்பத்து மூன்று லட்சத்து எழுபத்து மூவாயிரத்து தொண்ணூற்றிரண்டு) (43, 73, 092) ஆண்டுகளுக்கு முன்னர்தான் இந்த **இந்து வேதம்** பதினெண் சித்தர்களாலும், பதினெட்டாம்படிக் கருப்புகளாலும் வழங்கப்பட்டதாகும். இப்படி, இந்து வேதம் நான்கு லட்சத்து என்பத்தைந்தாயிரத்து தொள்ளாயிரத்து இருபது, ஆண்டுகள் இம்மண்ணுலகில் கொள்கை வடிவில், தத்துவ வடிவில், சொல் வடிவில் மட்டுமே வாழ்ந்திட்டது. அதன் பிறகுதான் **பஃறுளியாற்றங்கரையில்** நிறுவப்பட்ட தென் மதுரையில் இம் மண்ணுலகில் முதல் அரசான பாண்டிய அரசு

ஆதிசிவனாரை முதல் அரசானக் கொண்டு உருவாக்கப் பட்டுச் செயல்வடிவமான இந்துமதம் அறிவிக்கப்பட்டது. அதாவது, இந்த **இந்துமதம்** இன்றைக்கு 1901–க்கு முப்பத்தெட்டு லட்சத்து என்பத்தேழாயிரத்து நூற்றெழுபத்திரண்டு (38, 87, 172) ஆண்டுகளுக்கு முன்னால்; கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டம் எனபடும் குமரிக் கண்டத்தின் பஃறுளி ஆற்றங்கரை–யில் இருந்த தொன் மதுரையில் தோன்றிய இம் மண்ணுலகின் முதல் அரசான திங்கள் குலத்து (சந்திர குலத்து[ பாண்டிய அரசின் முதல் அரசான ஆதி-சிவனாரின் ஆட்சியில் தான் அரசாங்கப் பூர்வமாக அறிவிக்கப்பட்டது. அதுமுதல், கடந்த நான்குயுகங்களில் அவரல்லாமல் பதினோறு பதினெண் சித்தர் பீடாதி பதிகள் வாழையடி வாழையெனத் தோன்றி இந்த இந்து மதத்தை அவ்வப்போது மறுமலர்ச்சியும், வள வளர்ச்சியும், வலிமைச்செழிச்சியும், ஆட்சி மீட்சியும் பெறச் செய்து வந்திருக்கிறார்கள். இதுதான், நமது இந்து மதத்தின் நான்கு யுக வரலாற்றுச் சுருக்கம்

18. இந்த இந்து வேதம் ஆதிசிவனாரால்தான் சட்டப்பூர்வமாக இந்து மதமாக அறிவிக்கப்பட்டது. அப்-படி அறிவிக்கப்பட்ட ஆண்டை ஆரம்பமாகக் கொண்டு தான் இந்து மதத்தின் உகக் கணக்குகள் (யுகக் கணக்கு) கணக்கிடப்படும் மரபு தோன்றிற்று. இதன்படி :

| | |
|---|---|
| கிரேதா யுகம் | 1728, 080 ஆண்டுகள் |
| திரேதா யுகம் | 1290, 000 ஆண்டுகள் |
| துவாபர யுகம் | 864, 000 ஆண்டுகள் |
| கலியுகம் (இன்று வரை) | 5092 ஆண்டுகள் |
| | 38,87,172 ஆண்டுகள் |



இப்படி இந்துமதத்தின் நான்கு யுக ஆண்டு–கணக்கு இன்று 1991-உடன் 38,87,172 ஆண்டுகளாக் கின்றன. இதுதான், இந்துமதம் தோன்றி வளமான வாழ்க்கை வாழ்ந்துவந்துள்ள வரலாற்றுக்காலம். ஆனால் **'இந்து மத ஆண்டு'** என்ற ஒரு 'காலக் கணக்கீட்டை'; இந்து மதத்தின் தந்தையான பதினெண்சித்தர் பீடாதி பதிகள் குறிப்பிடுகிறார்கள். அக்கணக்கில் இந்த நான்கு உக ஒட்டு மொத்தக் காலக் கணக் கீட்டுடன்; இந்துமதம் வடிவப்படாமல் இந்து வேதம் மட்டும் இம்மண்ணுலகுக்கு அறிவிக்கப்பட்டிருந்த அனாதிக் காலம் எனப்படுகின்ற 4,85,920 ஆண்டுகளும் சேர்த்தே கணக்கிடப்படுகிறது. இந்தக் கணக்கீட்டின்படி இந்துமத ஆண்டு என்ற 'காலக் கணக்கீட்டு முறை' இந்தியா முழுவதும் இருந்து வரு-கிறது. இதனுடைய விளக்கமாகத்தான் பதினெண் சித்தர் பீடாதிபதிகள் தங்கள் தங்களுடைய காலங்களில் எழுதித் தொகுத்திடும் 'தொடர் வரலாற்று நூல்களான' (1) 'குரு பாரம்பரியம்' (2) 'இலக்கிய பாரம்பரியம்' (3) 'அரச பாரம்பரியம்' எனும் முப்பெரும் நூல்களிலும் மிகத் தெளிவாக 'இந்துவேத மதமான இந்துமதத்தின் காலக் கணக்கீடு' என்ற சொல்லைப் பயன்படுத்தியே தங்களு-டைய வரலாற்றுச் செய்திகளை எழுதியிருக்கிறார்கள். இதன்படிதான் கலியுகம் 3001 முதல் 3251முடிய வாழ்ந்-திட்ட (250 ஆண்டுகள் – கி.மு 100 முதல் கி.பி 150 வரை) பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குரு மகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூராரின் காலம் இந்து மத ஆண்டு 43,71,001 முதல் 43,71,251 வரை என்று முப்பெரும் வரலாற்று நூல்களி-லும் குறிக்கப்படுகின்றது. இதைப் போலவே கலியுகம் 3886 முதல் 4142 முடிய வாழ்ந்திட்ட (256 ஆண்டுகள்– கி.பி 785 முதல் கி.பி 1040 வரை) பதினோராவது பதி-னெண் சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞால-

குரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரின் காலம் இந்துமத ஆண்டு 43,71,886 முதல் 43,72,142 வரை என்று முப்பெரும் வரலாற்று நூல்களிலும் குறிக்கப்படு-கின்றது.

19. **இந்து வேதமும்** காலக் கணக்கீடும் :

இந்த இந்து வேதம் கணக்கற்ற கோடி கோடி ஆண்டுகளாக அண்டபேரண்டங்களில் வாழ்ந்து வருகின்ற ஒன்றாகும். எனவேதான் இந்த இந்துவேதம் 1,2,3, ... என்ற எண்களையும், எண்களின் வடிவங்களையும், எண்க-ளின் வரிசை முறைகளையும் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் எனும் நான்கு வகைப்பட்ட (சித்தர்கள் எதை-யும் நான்கு என்று பிரிக்கும் பழக்கப்படியே கணக்கியலி-லும் பகுத்துள்ளார்கள் என்பது இங்கு எண்ணிப்பார்க்கத் தக்கது). கணக்கியல்களையும் மிகமிகத் தெளிவாகவும்; வரையறுக்கப்பட்ட உண்மைகளாகவும் பெற்றிருக்கிறது. இதுவே, இந்துவேதம் மிகப்பன்னெடுங்காலமாக பகுத்த-றிவுப் போக்கில், அறிவு விழித்த நிலையில் வளர்க்கப்பட்டு வந்திருக்கிறது. அல்லது வளர்ந்திருந்திருக்கிறது. என்-பதற்குச் சான்றாகும். இதைத்தான், இந்துமதத்தை முதன் முதல் அரசாங்கப் பூர்வமாக இம்மண்ணுலகுக்கு அறிவித்த ஆதிசிவனார்; 'இந்து வேதம் மனிதவாழ்வுக்கு அடிப்படையான எண்ணையும், எண் சார்ந்த கணக்கியலை-யும், எழுத்தையும், எழுத்து சார்ந்த இலக்கிய இயலையும் இரு கண்ணென வழங்கியதால்தான் விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த மனிசர்கள் மென்மையும், நுண்-மையும், ஒண்மையும், திண்மையும், பாண்மையும் ஊற்-றெடுக்கும் மனதையுடைய மனிதர்களானார்கள். அதனால் தான், இம்மண்ணுலகின் கடைசி மனிதர்கள் வரை இந்து வேதத்தை முறையாகவும், நிறைவாகவும் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும், இம்மண்ணுலகில் தோன்றக்



கூடிய மனிதர்கள் அனைவருமே இந்து வேதத்தால் மனிச நிலையிலிருந்து மனித நிலைக்குக் கொண்டு வரப்பட்ட மனி-தர்களே; இவர்கள் தொடர்ந்து என்றென்றைக்கும் மனி-தர்களாக இருப்பதற்காகவே வழங்கப்படும் 'இந்து வேதத் தின் செயல்வடிவான இந்து மதத்தை ஏற்றுப் போற்றிப் பேணிப்பாதுகாத்துப் பயன்படுத்திடல் வேண்டும்' என்றும் ஆதிசிவனாராகிய யாம், பதினெண்சித்தர் மடம் பீடம் அமைக்கப்படும் இன்றைக்கு அறிவிப்புச் செய்கிறோம். இதே அறிவிப்பைத்தான். யாம் முதலில் முத்தமிழ்ச் சங்-கம் நிறுவிய போதும் அறிவித்தோம். அதாவது, மனித-னுக்கு முதலில் மொழியறிவு தேவை, பிறகு மத அறிவு தேவை என்பதுதான் பதினெண் சித்தர்களுடைய முடி-வான கருத்தாகும். இக்கருத்தே, இந்து வேதத்தில் கொள்கை அளவிலும், இந்துமதத்தில் செயல் வடிவிலும் நிலைநிறுத்தப் பட்டிருக்கிறது. இதைத்தான் அண்ட பேரண்டமாளும் இந்துவேதமும் இந்து வேதத்தின் செயல் வடிவான, இந்து மதமும், 'மொழியே மனித வாழ்வின் விழியும் வழியுமாகும்'; 'மதத்தின் விழியும் வழியும் மொழிதான்'; 'மொழிதான் அருளுலகையும் பொருளுல-கையும் இணைக்கும் சத்தி'; 'மொழிதான் மனிதர்களை அனைத்து வகையான அருளுலகத் தொடர்புகளுக்கும் உரி-யவர்களாக்குகிறது'; 'தமிழ் மொழி வழியாகத்தான் பிண்டங்கள், அண்டங்கள், பேரண்டங்கள், அண்ட பேரண்டங்கள் அனைத்தையும் அறியலாம்; அனைத்தோடும் இணையலாம்'; தமிழ்மொழி வழியாக அனைத்து வகைப்-பட்ட அருளுலகத்தவர்களோடும் தொடர்பு கொள்ள-லாம்'; தமிழ் மொழி வழியாகத்தான் பத்தி, சத்தி, சித்தி, முத்தி எனும் நான்கினையும் பெற முடியும்'; 'தமிழ்மொழி வழியாகத்தான் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றையும்; இம் மூன்றும் கலந்து உருவாகும் 'சீவனையும் சேர்த்து ஆக மொத்தம் நான்கை-

யும் முறையாகவும், நிறைவாகவும் தெரிந்து கொள்ள முடியும்'; 'தமிழ்மொழி வழியாகத்தான் முற்பிறப்பு மறுபிறப்பு,இப்பிறப்பு எனும் மூன்றையும் முறையாகவும், நிறைவாகவும் தெரிந்து புரிந்து கொள்ள முடியும்'; 'தமிழ் மொழியின் ஒவ்வொரு எழுத்தின் வரிவடிவமும் ஒலிநயமும் அருளூற்றின் கண்களாகும்; அருளுலகின் கண்களாகும்'; 'தமிழ் மொழியின் ஒவ்வொரு சொல்லும் அருளாற்றலைப் பெற்றுத் தரக்கூடிய பூசைப் பொருளாகும்'; 'தமிழ் மொழியின் ஒவ்வொரு சொற்றொடரும் அருளை ஊற்றெடுக்கச் செய்யும் பூசை மொழியாகும்'; ... என்று பலவாறு முத்தமிழ்ச் சங்கம் துவக்கப்பட்ட பொழுது யாம் கூறியதை எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படி, யாம் கூறுவதற்குக் காரணம் இம்மண்ணுலகின் அருளுலகை நிறுவிய மூலப்பதினெண் சித்தர்களும், மூலப்பதினெட்டாம்படிக் கருப்புக்களும் ஆதிசிவனாராகிய யாமே தென் இமய மலையின் தென் கங்கை ஆறும், தென் யமுனை ஆறும், தென் இந்து ஆறும் உருவாக்கும் முக்கோணத் தீவில் **மோகஞ்சிதரு**★ நகரில் அனாதிகாலந் தொட்டு இருந்து வரும் முத்தமிழ்ச் சங்கத்தையும் அதனருகிலுள்ள

---

★ இந்த நகரின் நினைவாகத்தான் கடல்கோள்களால் தென் இமயமலையும் மேற்படி ஆறுகளும் அழிந்த பிறகு தோன்றிய வட இமய மலையில் தோன்றிய ஆறுகளும வடகங்கை, வடயமுனை, வட இந்து (சிந்து), வடப் பிறம்ம புத்திறம், .... முதலிய ஆறுகளின் இடங்களில் இதே பெயரை உடைய அதாவது மோகஞ் சிதரு என்ற பெரை உடைய நகரங்கள் தோற்றுவிக்கப்பட்டன. ஆனால் இன்றைக்கு சிந்து என்று சொல்லப்படும் வடஇந்து ஆற்றங்கரையில் தான் புதையுண்ட மொகஞ்சோதரா எனப்படும் மோகஞ் சிதரு நகரம் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. மற்ற மூன்று ஆற்றங்கரைகளிலிருந்த நகரங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதைப் போலத்தான் இந்த மோகஞ் சிதரு நகருக்கு அருகில் பதினெண் சித்தர் மடமும் பீடமும் தோற்றுவிக்கப்பட்ட அருட்பா நகர் இருந்திட்டது. அதுவும், இப்பொழுது புதைபொருள் ஆராய்ச்சியால்



அருட்பாநகரில் உள்ள பதினெண்சித்தர் மடம்,பீடம் முதலியவற்றையும் பஃறுளியாற்றங்கரையிலுள்ள தொன்மதுரைக்குக் கொண்டு வந்தோம். எனவேதான், தமிழ் மொழியின் அருமை, பெருமை, கடவுள் தன்மை, அருளாற்றல், ... முதலிய இன்னோரன்ன முதன்மையான செய்திகள் பலவற்றையும் முத்தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்கப்பட்ட விழாவிலேயே அறிவித்து விட்டோம். இப்பொழுது பதினெண்சித்தர் மடம், பீடம் துவக்கப்படும் இந்த விழாவில் **இந்துவேதத்திற்கும்**, இந்துமதத்திற்கும், அருளுலகுக்கும், கடவுளர் உலகத்திற்கும், உயிர் மூச்சாக இருக்கின்ற அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி பற்றிய பேருண்மைகள் பலவற்றையும் வெளியிடுகிறோம், ... என்று ஆதி சிவனார் தமது குருபாரம்பரியத்தில் குறிப்பிடுகிறார்- என்றிப்படி பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி அவர்கள் இந்துவேதம் பற்றியும் இந்து மதம் பற்றியும் எழுதப்புகுந்த தமது, இலக்கியங்களில் அல்லது தமது படைப்புக்களிலெல்லாம், இந்து மதத்தைத் தோற்றுவித்த பதினெண் சித்தர் மடத்தின் முதல் மடாதிபதியாகவும், பீடாதிபதியாகவும்; இம்மண்ணுலகின் முதல் அரசான பாண்டிய அரசின் முதல் அரசனாகவும் செயல்பட்டிட்ட ஆதிசிவனாரின் வாசகங்களை எல்லாம் அப்படி அப்படியே எடுத்து எழுதுகிறார். இப்படி இவர்

---

வடசிந்து ஆற்றங்கரையிலேயே மொகஞ்சோதரா நகரையொட்டியே அரப்பா நகராகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதாவது பதினெண் சித்தர்களும், பதினெண்சித்தர் பீடாதிபதிகளும் இந்த உலகில் முதன் முதல் தோன்றிய மிகப் பெரிய நிலப்பரப்பான இளமூறியாக் கண்டம் மூன்று கடல்கோள்களால் கடலுக்குள் ஆழ்ந்து அழிந்த போதிலும் அவற்றின் நினைவாகவே அக்கண்டத்திலிருந்த மலைகள், ஆறுகள், காடுகள், ... முதலியவற்றின் தூய செந்தமிழ்ப் பெயர்களையே புதிதாகத் தோன்றிய வட இமயமலைமுதல், வட வேங்கடம் வரையுள்ள நிலப்பரப்பிலுள்ள மலைகளுக்கும், ஆறுகளுக்கும், காடுகளுக்கும் பெயரிட்டார்கள்.

எழுதப் புகுந்ததற்குக் காரணம் இந்தக் கலியுகமாகிய நான்காவது யுகத்தில் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியாகிய இவர்தான் இக்கலியுகத்தில் தோன்றிய முதல் பதினெண் சித்தர் பீடாதிபதியாவார். அதாவது கலியுகத்தில் பதினெண்சித்தர்களுடைய சித்தர் நெறி-யெனும் சீவ நெறியான மெய்யான இந்துமதம் மிகுதியாக நலிந்தும், மெலிந்தும், சிதைந்தும், சீரழிந்தும், உருக்-குலைந்து செல்வாக்கிழந்து போய்விட்ட காரணத்தினால் தான் மூலப்பதினெண் சித்தர் பீடாதிபதிகளால் இந்தப் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி தோற்றுவிக்கப்-பட்டார். அதாவது, **இ ந் து ம த ம்** செல்வாக்கிழக்கும் பொழுதெல்லாம் மூலப் பதினெண் சித்தர்கள் பதினெண் சித்தர் பீடாதிபதிகளைத் தோற்றுவிப்பார்கள் என்பதே இந்து மதத்தின் மரபு.

20. **இந்து வேதத்தின்** விண்ணியல் மண்ணியல் **அறிவு :-** மூலப் பதினெண் சித்தர்களுடைய இந்து வேதம் அண்டங்கள், பேரண்டங்கள், அண்டபேரண்டங்-கள் முழுவதும் பரவியிருக்கின்ற ஒன்று என்பதனால்; இது இந்த மண்ணுலகியலின் இயல்புகளுக்கும், இயக்கங்களுக்-கும் விண்ணியலோடு உள்ள தொடர்புகளையெல்லாம் முழுமையாக ஆராய்ந்து தேவையான உண்மைகளையெல்-லாம் இந்து மதத்தின் வாழ்வியலாக வார்த்தெடுத்துத் தருகிறது. அதாவது, இந்த இந்து வேதத்தில்தான் இம்-மண்ணுலகம் எப்பொழுது தோன்றிற்று ? எப்படித் தோன்றிற்று ?; இம்மண்ணுலகம் எப்பொழுது அழியும்? எப்படி அழியும் ?; இம்மண்ணுலகில் பயிரினங்களும் உயிரி-னங்களும் எப்பொழுது தோன்றின? எப்படி அழியும் ?; இம்மண்ணுலகோடு தொடர்புடைய விண்மீன்கள் என்-னென்ன ? இராசிகள் என்னென்ன ? கோள்கள் என்-னென்ன ?; இந்த மண்ணுலகுக்குத் தொடர்பான விண்-



ணுலகக் கடவுள்களின் வகைகள் என்னென்ன? மண்ணுல-கக்கடவுள்களின் வகைகள் என்னென்ன ?; ... முதலிய மிகப் பெரிய பெரிய வினாக்களுக்கெல்லாம் மிகமிகத் தெளிவான நேரடியான வரையறுக்கப்பட்ட பதில்களைப் பெற்றிருக்கிறது. எனவேதான், இந்து வேதம் ஒரு நொடிப் பொழுது, ஒரு வினாடிப் பொழுது, ஒரு சாமப் பொழுது, ஒரு பகற் பொழுது, ஓர் இரவுப் பொழுது, ஒரு நாட்பொழுது முதலிய அனைத்தையும் கண் இமைதானாக இமைக்கின்ற நேரத்தை அடிப்படையாகக் கொண்டு மிக-மிக நுட்பமாகவும், திட்பமாகவும், வரையறுக்கப்பட்ட அளவுகளைப் பெற்றனவாக உருவாக்கியிருக்கிறது. இதன் தொடர்ச்சியாகத்தான் ஒவ்வொருநாளின் பெயர், மாதத்தின் பெயர், ஆண்டின் பெயர், விண்மீன்களின் பெயர், இராசிகளின் பெயர், கோள்களின் பெயர், ஒரு நாளின் ஆறுகாலப்பெயர், எட்டு யோக நிலைப் பெயர், ஆண்டின் ஆறு பருவங்களின் பெயர், ... முதலியவைகள் அனைத்தும் மிகமிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வரைய-றுத்து வழங்கப்பட்டிருக்கின்றன இந்து வேதத்தால். இவையனைத்தையும் அண்டபேரண்டம் மு ழு வ தை யு ம் ஆளும் அனைத்து வகைப்பட்ட பதினெண் சித்தர்கள். பதினெட்டாம்படிக் கருப்புகள், சித்தர்கள், வழிபடுநிலை-யினர்கள், கடவுள்கள், தேவியர்கள், தேவதைகள், தேவர்கள், கணங்கள், இருடிகள், முனிவர்கள், ... முதலியோர் கணக்கற்ற கோடி கோடி ஆண்டுகளாக ஆராய்ந்தறிந்தே உருவாக்கியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பகுத்தறிவுப் பூர்வமான பயன்மிக்க ஆராய்ச்சி முடிவுகளை உடைய ஒரே ஒரு வேதம் இந்து வேதம்தான்.

21. மேலே குறிப்பிட்டது போல் **இந்துவேதம்** ஒன்றில்தான் பகுத்தறிவுப் பூர்வமான ஆராய்ச்சிகளைப் பல்வேறு வகையினர்கன் கணக்கற்ற கோடியாண்டுகள்

நிகழ்த்திக் கண்டறிந்த உண்மைகள் மிகுதியாக இருக்கின்றன. இதுமட்டுமல்ல, இந்த இந்துவேதத்தில் தான் இந்து வேதத்தின் அருளுலகத்தவர்களான பதினெண் சித்தர்கள், 48வகைச் சித்தர்கள், 48 வகைப்பட்ட கடவுள்கள், 48 வகைப்பட்ட வழிபடுநிலையினர்கள், 48 வகையான அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், 48 வகையான மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள், 48 என்ற எண்ணிக்கைக்குட்பட்ட ஆச்சாரியர்கள் தோன்றிடக்கூடிய எண்வகை ஆச்சாரியார்கள், பதினான்கு வகைப்பட்ட குருவழி ஆச்சாரியார்கள்' 14 வகைச் சித்தியாளர்கள், ... முதலியோர், அனைவரையுமே எவர் வேண்டுமானாலும் முறையான பயிற்சி முயற்சிகளால் காணமுடியும், காணமுடியும், காணமுடியும் என்றும்; கண்ணால் காண்பவர்களோடே எல்லா வகையான தொடர்புகளையும் உருவாக்கிக் கொள்ள முடியும் அல்லது வளர்த்துக் கொள்ள முடியும் என்றும் மிகத் தெளிவான செயல்முறைகளைப் பெற்றிருப்பதுதான் இந்துவேதம். இவற்றால் தான் **இந்து வேதத்தை** இம்மண்ணுலகுக்கு வழங்கிய மூலப்பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும்; ''**இந்து வேதத்தால்** தான் அருளுலகப் பொருளுலக இருள்களுக்கும், இன்னல்களுக்கும் முடிவு காணப்பட்டு விடிவு உருவாக்கப்படும்'' என்று அழுத்தந்திருத்தமாக, ஆணித்தரமாகக் குறிக்கப்படுகிறது. இப்படி இந்துவேதம் எல்லாவகையான செல்வங்களையும் வழங்குகின்ற ஓர் ஒப்புயர்வற்ற தனிப்பட்ட அண்டபேரண்டங்களனைத்திலும் பரவிய மாபெரும் வேதமாக இருக்கின்ற காரணத்தினால் தான்; இதனுடைய தொடர்பும், அடிப்படையும், உதவியும், உள்ளீடும், ... இல்லாமல் எந்த ஒரு **வேதமும்** எந்த உலகத்திலும் சரி தோன்ற முடியாது, தோன்ற



முடியாது, தோன்ற முடியாது. தோன்றவே முடியாது என்ற கருத்து முடிவாகக் கூறப்படுகிறது.

22. இப்படி **இந்துவேதம்** தோன்றிய இடம் கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டம் என்பதும்; இந்த இந்துவேதம் தோன்றி இன்றைக்கு 1991–ம் ஆண்டு என்ற கணக்குப்படி இன்றைக்கு 4373092 ஆண்டுகளுக்கு முன்னால் இம்மண்ணுலகில் தோற்றுவிக்கப்பட்டது என்பதும்; இந்த இந்துவேதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கியவர்கள் அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்களும் பதினெட்டாம்படிக் கருப்புகளும் ஆவார்கள் என்பதும்; இந்த இந்து வேதம் நான்கு யுகங்களாக வாழ்ந்து வருகிறது என்பதும்; இந்த இந்து வேதத்தில்தான், எண்ணியல் அறிவு, கணக்கியல் அறிவு, எழுத்தியல் அறிவு, இலக்கிய இயல்அறிவு. விண்ணியல் அறிவு, விண்ணியல் இயக்க அறிவு, மண்ணியல் அறிவு, மண்ணியல் இயக்க அறிவு முதலிய கணக்கற்ற அறிவுகள் வளர்க்கப்பட்டுள்ளன, என்பதும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் படைப்புகளில் மிகத் தெளிவாக அறிவிக்கப்படுகின்றன.

23. மேலே குறிப்பிட்டது போல் பல்வேறு வகைப்பட்ட அறிவுகள் கலை இயல்களாகவும், அறிவியல்களாகவும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது இந்துவேதத்தில். ஆனால், 'இந்த **இந்துவேதம்** செயல்வடிவில் **இந்து மதம்** என்று வாழ ஆரம்பித்த பிறகு இதனுடைய அனைத்து வகைப்பட்ட அறிவியல்களும், கலையியல்களும் ஐந்து பெரும் வகைகளுக்குட்பட்டவைகளாக மிகத்தெளிவாகப் பகுக்கப்பட்டு விட்டன. அவை முறையே ஞானம், அகஞானம், புறஞானம், விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம் என்று ஐந்துவகைப்படும்.

24. இந்துவேதம் இந்த உலகத்தை நான்கு வகைப்பட்ட நிலங்களாகப் பகுத்து நானிலம் என்று பெயரிட்டாலும் மானுட வாழ்வியலைப் பொருளுலக வாழ்வியலாகவும், அருளுலக வாழ்வியலாகவும் பகுக்கும் பொழுது இந்த உலகை ஐந்து வகைப்பட்ட பிரிவுகளாகப் பிரிக்கவேண்டிய கட்டாய நிலைக்கு வந்து விட்டது. எனவே தான், மலையும் மலைசார்ந்த இடம் குறிஞ்சி; காடும் காடு சார்ந்த இடம் முல்லை; வயலும் வயல் சார்ந்த இடம் மருதம்; கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல்; முல்லையும் குறிஞ்சியும் எதிர்பாராமல் இயற்கையின் சீற்றத்தால் வளம் குன்றி திரிந்தால் பாலை என்று ஐந்து வகைப்பட்ட நிலங்களாகப் பகுத்து இந்த ஐந்து வகைப்பட்ட நிலப்பகுப்புக்களே இந்து வேதத்தின் செயல்வடிவான இந்துமதத்திற்குரியவைகளாக அறிவிக்கப்பட்டுவிட்டன. அதாவது இந்துவேதத்தின்படி இந்தநிலம் நான்கு வகைப் பிரிவுகளை உடைய நானிலமாகும்' ஆனால் இந்துமதப்படி இந்த உலகம் ஐந்துவகை நிலப்பரப்புக்களை உடைய ஐநிலமாகும். இந்த ஐந்நில மக்களின் வாழ்வே ஐந்திணை வாழ்வாகும். இந்த ஐந்திணை வாழ்வின் அருளுலக இணைப்பே ''ந,ம,சி,வா,ய = நமசிவாய''; 'ப,ரா,ச,த்,தி = பராசத்தி';சி,வா,ய,ந,ம = சிவாயநம'';... என்ற ஐந்தெழுத்துப் பூசைமொழியாயின. இவற்றின் விரிவுகளும், பிரிவுகளுமாகத்தான் எல்லா வகையான அருளுலக மந்தரம், மந்திரம், மந்திறம், மாந்தரம், மாந்தரீகம் என்ற ஐந்தும் அருளுலகக்கடவுள்கள் அனைவரையும் அன்றாடப் பூசையில் போற்றிப் பேணிப் பாதுகாத்து வளர்த்திடவும்; தந்தரம், தந்திரம், தந்திறம், தாந்தரம், தாந்தரீகம் எனும் ஐந்தும் அருளுலகிலுள்ள அனைத்து வகைப்பட்ட கடவுள்களை உருவாக்குவதற்கும், அதாவது தோற்றுவிப்பதற்கும், எந்தரம், எந்திரம், எந்திறம், ஏந்தரம், ஏந்தரீகம் எனும் ஐந்தும்



அருளுலகிலுள்ள அனைத்து வகைப்பட்ட கடவுள்களையும் மற்ற அனைத்து வகைப்பட்டவர்களையும் இயக்குவதற்கும் என்று உருவாக்கப்பட்டன. இவையே, இந்துவேதத்தின் செயல் வடிவான இந்து மதத்தின் அமைப்புக்களாகும்.

25. இந்த இந்துமதமே, இம்மண்ணுலகின் அருளுலகத்தைப் பொறுத்தவரை, 'அருளுலக விதைப்பண்ணையாகவும்', 'அருளுலக நாற்றுப்பண்ணையாகவும்' உருவாக்கப்பட்டிட்டது. எனவேதான், இந்த உலகில் முதன் முதல் தோன்றிய மிகப்பெரிய நிலப்பரப்பான இளமுறியாக் கண்டமெனும் குமரிக் கண்டத்தில் இந்துமதத்தின் அலுவலகங்களாகவும், செயலகங்களாகவும் உருவாக்கப்பட்டிட்ட அனைத்து 'வகையான நிறுவன நிர்வாகங்களும்; காலப்போக்கில் மூன்று கடல் கோள்களால் இளமுறியாக் கண்டம் சிதைந்து புதியபுதிய கண்டங்களும், சிறிய பெரிய தீவுகளும் தோன்றத் தோன்ற அங்கெல்லாம் உடனுக்குடன் உருவாக்கப்பட்டிட்டன. அதாவது, அண்ட—பேரண்ட மாளும் பதினெண் சித்தர்களும், பதினெட்டாம் படிக்கருப்புக்களும், இவர்களைச் சேர்ந்தவர்களும் இம்மண்ணுலகோடு மிக நெருக்கமானத் தொடர்புகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதால்; புதிதுபுதிதாக நிலப்பரப்புக்கள் தோன்றியவுடன் அங்குள்ள அருளூற்றுக்களையெல்லாம் கண்டு பிடித்து முறையாக நாற்பத்தெட்டு (48) வகைக் கருவறைகளையும், 48 வகை வெட்டவெளிக் கருவறைகளையும், 48 வகை வழிபாட்டு நிலையக் கருவறைகளையும் 48 வகைக் கோயில்களின் மூலக் கருவறைகளையும் தோற்றுவித்து அண்டபேரண்டமாளும் இந்துமதம் வேரூன்றித் தழைத்திடும்படிச் செய்திடுகிறார்கள். எனவேதான், இந்த உலகம் முழுவதுமே இந்து மதம் பரவியிருக்கும்படியான நிலைமை உருவாயிற்று. மேலும், புதிதுபுதிதாகத் தோன்றிடும் நிலப்பரப்புக்கள் அனைத்திற்

கும், கடல் கோள்களால் சிதைவுற்ற இளமுறியாக் கண்டத்தின் மக்களான நாகரீக முதிர்ச்சியடைந்த தமிழர்கள் தான் கால் போக்கில் சென்று குடியேறினார்கள். அப்படி அவர்கள், குடியேறிய போது அங்கு இயற்கையாகவேத் தோன்றியிருந்த மனிதர்களுக்கு இந்து வேதத்தையும், இந்துமதத்தையும் கற்பித்தார்கள். அப்படி அவர்கள் இந்து வேதத்தையும் இந்து மதத்தையும் கற்பிப்பதற்குச் சரியாக ஏற்கெனவே அண்ட பேரண்டமாளும் பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும் உருவாக்கிட்ட இந்துமதத்தின் நிறுவனங்களான கோயில்கள், கோயில் மூலக்கருவறைகள், வெட்டவெளிக் கருவறைகள், வழிபாட்டு நிலையக் கருவறைகள் எனும் நான்கும் இருந்திட்டன. இவற்றால்தான், இந்த மண்ணுலகில் தோன்றிட்ட பல்வேறு வகையான இனமக்களும் தங்கள் தங்கள் விருப்பப்படி, தங்கள் தங்களுடைய நாட்டின் இயற்கை நிலைகளுக்கும், இனப்பழக்க வழக்கங்களுக்கும் ஏற்ற வகையில் புதிய புதிய மொழிகளையும், மதங்களையும் தோற்றுவித்தபோதும் கூட; அந்த மொழிகளனைத்தும் தமிழ் மொழியினையே அடிப்படையாகக் கொண்டவைகளாகவும், மதங்களனைத்தும் இந்து மதத்தையே அடிப்படையாகக் கொண்டவைகளாகவும் உருவாகின, உருவாகின, உருவாகின. இந்தப் பேருண்மை காலப்போக்கில் மறக்கப்பட்டுவிட்டது, மறக்கப்பட்டுவிட்டது, மறக்கப்பட்டு விட்டது. அத்துடன், காலப்போக்கில் உலகமானுட இனங்களுக்கிடையில் போட்டி பொறாமைச் சண்டைச் சச்சரவுகளும், போர் வெறிகளும், ஆதிக்கப் போர்களும் மூண்டு விட்டன. அப்படி, உலக மனித இனங்கள் ஒவ்வொன்றும் மற்றவற்றைப் பகைத்து, எதிர்த்துப் போரிட்டுச் சிதைத்துச் சீரழித்து அடிமைப் படுத்தி ஆதிக்கம் செலுத்தும் போர் வெறி முயற்சிகளில் ஈடுபட்டுவிட்ட காரணத்தினால்தான்; 'உலக முழுவதுமுள்ள மொழிகள்



அனைத்திற்கும் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழிதான் அடிப்படை' என்ற பேருண்மையும், 'உலக மதங்கள் அனைத்திற்கும் அண்டபேரண்ட மதமான இந்து மதமே அடிப்படை' என்ற பேருண்மையும் கண்மூடித்தனமாக மறுக்கப்பட்டன, மறுக்கப்பட்டன, மறுக்கப்பட்டன; வெறுத்துப் புறக்கணித்து ஒதுக்கப்பட்டன, வெறுத்துப் புறக்கணித்து ஒதுக்கப்பட்டன, வெறுத்துப் புறக்கணித்து ஒதுக்கப்பட்டன. இப்படியாகத்தான் உலக மானுட இனங்களுக்கிடையில் முளைத்திட்ட போட்டி பொறாமைச் சண்டைச் சச்சரவுகளும், ஆதிக்கப் போர் வெறிகளும் நன்கு கிளைத்துச் செழித்துக் கொழுத்து வளரலாயின. அதன் விளைவாக மனித இனங்களுக்கிடையே நடந்த போட்டி பொறாமைச் சண்டைச் சச்சரவுகளும், ஆதிக்கப் போர் வெறிகளும் மொழிகளுக்கிடையிலும், மதங்களுக்கிடையிலும் முளைத்துக் கிளைத்துச் செழித்துக் கொழுத்து வளர்ந்து விட்டன, வளர்ந்து விட்டன, வளர்ந்து விட்டன.

26. இப்படி இனச்சண்டை சச்சரவுப் போர் வெறிகள் மொழிகளுக்கிடையிலும், மதங்களுக்கிடையிலும் முளைத்துக் கிளைத்துச் செழித்துக் கொழுத்து வளர்ந்து விட்ட காரணத்தினால்தான்; தனி மனிதர்களுடைய உணர்வுகளையும், எண்ணங்களையும் அடுத்தவர்களுக்குப் பரிமாறி ஒருவருக்கொருவர் நட்பையும், தோழமையையும் வளர்க்கப் பயன்பட்டிடும் மொழி தனி மனிதர்களுக்கிடையில் வேற்றுமைகளையும் பகைகளையும். தேவையில்லாத கசப்புணர்வுகளையும் வளர்க்கக் கூடிய ஒன்றாகிவிட்டது. இதைப்போலவே ஓர் இனமக்கள் அல்லது ஒரு நாட்டு மக்கள் குடும்பம் குடும்பமாக சமுதாயம் எனும் கட்டுக் கோப்பைப் பெற்று ஒற்றுமையுடனும், பற்றுடனும், பாசத்துடனும், சமத்துவத்துடனும், சமாதானத்துடனும் வாழ்வதற்குப் பயன் படவேண்டிய மதம்

குடும்பங்களுக்கிடையில் வேற்றுமைகளையும், பகைகளையும், தேவையில்லாத கசப்புணர்வுகளையும் வளர்க்கக் கூடிய ஒன்ருகிவிட்டது. எனவேதான், இம்மண்ணுலகில் மானுட இனங்களுக்கிடையில் நல்ல ஒற்றுமையும், பற்றும், பாசமும், சமாதானமும், சமத்துவமும், உருவாக்கப்பட வேண்டுமேயானுல் மொழிகளுக்கிடையேயும், மதங்களுக்கிடையேயும் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்ந்திருக்கின்ற போட்டி பொருமை வெறுப்புணர்வுகள், மறுப்புணர்வுகள், எதிர்ப்புணர்வுகள், பகையுணர்வுகள், ஆதிக்கப் போர் வெறியுணர்வுகள் முதலியவை அனைத்தும் வேருடன் களையெடுக்கப்பட வேண்டும், களையெடுக்கப்பட வேண்டும், களையெடுக்கப்படவேண்டும் என்று முடிவெடுக் கப்பட்டது. அந்தக் களையெடுக்கும் பணியை யாரும் புண்பட்டு விடாமல், அதிக அளவு பாதிக்கப் பட்டுவிடாமல் அமைதியான கருத்து மாற்றப் புரட்சிகளின் மூலம்!; தத்துவப் புரட்சிகளின் மூலம்!; செயல் சித்தாந்தப்புரட்சிகளின் மூலம்!; செய்திட வேண்டும், செய்திடவேண்டும், செய்திட வேண்டும். இப்படிப்பட்ட கருத்து வளமும், கொள்கை வளமும், குறிக்கோள்வளமும் பதினெண்சித்தர்களுடைய அண்டபேரண்டமாளும் இந்துவேதத்திற்குத் தான் உண்டு, உண்டு, உண்டு. மேலும், இந்த இந்து வேதத்தின் செயல் வடிவமான இந்து.மதத்திடம் மேற்படி மொழி மத வேற்றுமைகளையும், வெறிகளையும், போட்டி பொருமைச் சண்டைச் சச்சரவுகளையும் போர்களையும் நளினமாக முழு அளவில் தடுத்து அகற்றுவதற்குரிய செயல் நிலைகளும் சட்ட திட்டங்களும், நடைமுறைகளும், ஒழுகலாறுகளும், ஏராளமாக இருக்கின்றன, ஏராளமாக இருக்கின்றன, ஏராளமாக இருக்கின்றன. எனவே தான், இந்து வேதமும், இந்துவேதமதமான இந்துமதமும் மொழியைப் பற்றியும், மதத்தைப்பற்றியும் கடவுள்களைப் பற்றியும்,



அருளுலகைப் பற்றியும், பொருளுலகைப் பற்றியும், அருளுலகப் பொருளுலகத் தொடர்புகள் பற்றியும் கூறுகின்ற பேருண்மைகளை இந்த உலகிலுள்ள எல்லா இனத்தவர்களும், மொழியினர்களும், மதத்தவர்களும், நாட்டவர்களும் நன்கு தெரிந்து புரிந்து கொள்ளும்படி எடுத்துக் கூறும் பணி துவக்கப்படுகிறது. இப்பணியே இந்து வேத பாடசாலைகளாகவும், இந்து வேத முழக்கக் கூட்டங்களாகவும் இந்து மறுமலர்ச்சி இயக்கமாகவும், இந்துமதவளர்ச்சித் திருச்சபையாகவும், ... பல்வேறு வடிவங்களைப் பெற்றிருக்கின்றன.

27. என்றிப்படி, இந்துவேதம் என்று தலைப்பிட்டு முதல்யுகம் முடிந்து இரண்டாவது யுகத்தில் தோன்றிய பதினெண்சித்தர் பீடாதிபதிகள் எழுத ஆரம்பித்து விட்டார்கள். அதாவது, முதல் யுகம் முடிந்து மிகப்பெரிய கடல்கோள் ஏற்பட்டு; அதனால், இளமுறியாக் கண்டத்திலிருந்த தென்இமயமலையும், அதைச் சார்ந்த பெரும் பகுதியும் கடலுக்குள் மூழ்கி புதிய புதிய கண்டங்களும்; சிறிய பெரிய தீவுகளும் புதிதாகத் தோன்றி; அங்கெல்லாம் பயிரினங்களும், உயிரினங்களும், மனிதர்களும் தோன்றி இரண்டாவது யுகத்தில் பல்வேறு இனங்களும், மொழிகளும், மதங்களும், இளமுறியாக் கண்டத்தோடு தொடர்பு கொண்டு வாழ்ந்திட்ட காலத்தில் தோன்றிய பதினெண் சித்தர் பீடாதிபதிகளே இந்து வேதம், இந்து வேதமதமான இந்து மதம் என்று தலைப்பிட்டுப் பல நூல்களை எழுதினர்கள். அவை, 'இந்து', **'வேதம்'**, **'மதம்'**, 'இந்து வேதம்', **'இந்துமதம்'** என்ற ஐந்து சொற்களுக்கும் தனித்தனியாகப் பொருள் விளக்கம் கூறும் நூல்களாகவே சிறப்புற்று விளங்குகின்றன. காலப் போக்கில் தோன்றிய பதினெண் சித்தர் பீடாதிபதிகள் இந்த ஐந்து தலைப்புக்-

களிலும்; ‘இந்து வேதம்’, ‘இந்து மதம்’ என்ற இரண்டு தலைப்புக்களில் மட்டும் சிறப்பாக விளக்குகின்ற நூல்களை எழுதினார்கள்.

28. பதினெண் சித்தர் பீடாதிபதிகள் உலக அளவில் இனச்சண்டை, மொழிச்சண்டை, மதச்சண்டை, நாட்டுச் சண்டை எனும் நான்கும் வலுப்பட்டுப் பெரும் போர்கள் நிகழ்ந்து உலக அமைதி மிகப்பெரிய அளவில் பாதிக்கப் படும் பொழுது தான் தோன்றிச் செயல்படுவார்கள் என்பது தான் மரபு. இப்படித் தோன்றும் பதினெண் சித்தர் பீடாதி பதிகள் பெரும்பாலும் **தங்களுடைய ஏட்டறிவாலும், பயிற்சி முயற்சித் தேர்ச்சி முதிர்ச்சிகளாலும்,** ... உலக மானுட இனத்தைக் காப்பாற்ற முயலுவார்கள், முயலுவார்கள், முயலுவார்கள். அம்முயற்சிகளுக்குச் சோதனைச் சாலைகளாக, பயிற்சிப் பள்ளிகளாக, உலைக்களங்களாக, ... தங்களுடைய தாய்நாட்டையே பயன் படுத்திடுவார்கள். அதில், அவர்கள் எதிர் பார்க்கின்ற வெற்றி கிடைக்காத காரணங்களினால் தான் இந்துவேதத்தை நன்கு தெரிந்த இந்து வேதக் கடவுள்களில் யாராவது ஒருவரை அழைத்து; அவரைத் தங்களோடு உலகம் முழுவதும் சுற்றிக்காணச் செய்து அதன்பிறகே உலகை அவர்களுடைய காலச் சூழ்நிலைகளில் உய்வித்துக் காப்பாற்றக்கூடிய இந்து வேதக் கருத்துக்களை மட்டும் ‘**இந்துவேதம்**’ என்ற தலைப்பில் புதிதாக எழுதித்தரச் சொல்லி வாங்கி அதைப் பரப்புவார்கள். ஏனென்றால், பதினெண் சித்தர்களுடைய இந்து வேதம் என்பது பிண்டங்கள், அண்டங்கள், பேரண்டங்கள், அண்டபேரண்டங்கள் எனும் நான்கினுக்கும் உரிய கோடிக் கணக்கான பிறச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பல நூறாயிரக் கணக்கான தலைப்புகளில் எழுதப்பட்ட மிகப்பெரிய ஒன்றாகும். அவற்றிலிருந்து இந்த மண்ணுலகுக்குரிய தம் காலத்திய பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை வழங்கக்கூடிய இந்துவேதக் கருத்துக்களை மட்டுமே தங்களுக்கு விருப்பமான கடவுள்களின் மூலம் எழுதித் தரப் பெற்று அல்லது எழுதி வாங்கி செயல்பட்டிடுவார்கள், பதினெண் சித்தர்கள். இந்த வரலாற்றை விளக்குவனவாக உள்ள குருபாரம்பரிய வாசகங்களில் சிலவற்றை மட்டும் இங்கு எடுத்துக் காட்டுகிறோம்.



i) ‘‘காலங்கள் தோறும் கடவுளர்களாலேயே எழுதித் தரப்படும் வேதமே இந்து வேதம்’’

‘‘கடவுளர்களை மண்ணுலகுக்கு வரவழைக்கும் வேதமே இந்து வேதம்’’

‘‘மண்ணுலகத்தவர்கள் விண்ணுலகுக்குச் செல்ல உதவும் வேதமே இந்து வேதம்’’,

‘‘கடவுளர்களை மனிதர்களாக வந்து செயல்படச் செய்யும் வேதமே இந்து வேதம்’’

‘‘மனிதர்களைக் கடவுள்களாகிச் செயல்படச் செய்யும் வேதமே இந்து வேதம்’’,

‘‘கடவுள்களின் உலகைப் பற்றிய உண்மைகளைக் கடவுள்களே விளக்குகின்ற வேதமே **இந்து வேதம்**’’

‘‘கடவுளர் உலகத்தோடு தொடர்பு கொள்ள வழியாக வழிகாட்டியாக, வழித்துணையாக இருக்கின்ற வேதமே **இந்து வேதம்**’’,

‘‘கணக்கற்ற கோடிக்கணக்கான கடவுள்களில் உள்ள அடிப்படையான பதினாறு வகையினர்களையும் பற்றிய பேருண்மைகளை மிகமிகத் தெளிவாக விளக்கியுரைக்கின்ற வேதமே இந்துவேதம்,’’

''இந்த உலகின் மூல முதல் வேதமே இந்துவேதம்,''

''இந்த உலகில் தோன்றக் கூடிய அனைத்து வேதங்களுக்குப் மூலமாக, முதலீடாக, அடிப்படையாக, ஆதாரமாக, உள்ளீடாக இருக்கின்ற வேதமே இந்துவேதம்,''

''அருளுலகப் பொருளுலக இருளகற்றும் வேதமே இந்து வேதம்,''

''மொழிவிடுதலை, இனவிடுதலை, நாட்டுவிடுதலை, மதவிடுதலை எனும் நான்கினையும் காத்திடும் ஒரே ஒரு மூல வேதமே இந்துவேதம்''

''தனி மனித வாழ்வு, குடும்பவாழ்வு, சமுதாயவாழ்வு அரசியல்வாழ்வு எனும் நான்கு வாழ்வுகளுக்கும் உரிய உறவு முறைகளையும், உரிமை முறைகளையும் அருமை நிலைகளையும், பெருமைநிலைகளையும் வரையறுத்து விளக்கிக் காத்துத் தரும் ஒரே ஒரு வேதமே இந்து வேதம்''

''விலங்குகளோடு விலங்குகளாக அலைந்து திரிந்திட்ட மனிசர்களைப் பண்பட்ட மனதை உடைய மனிதர்களாக்கித் தந்த ஒரே ஒரு வேதமே இந்துவேதம்''

''மனிதர்களை என்றென்றைக்கும் மனிதப் பண்பாட்டினையும், நாகரீகத்தினையும் போற்றிப் பேணிப் பாதுகாத்து இனியநல்வாழ்வு வாழச் செய்யும் வேதமே இந்து வேதம்'',

''மனிதப்பிறவியே புனிதப்பிறவி என்று கூறும் வேதமே இந்து வேதம்'',

''கடவுள்களும் மனிதர்களும் இயற்கையாகத் தோன்றியவர்களே என்று கூறும் ஒரே ஒரு வேதம் இந்து வேதம்''. கடவுள்களும், மனிதர்களும் ஒருவரை ஒருவர் போற்றிப்



பேணிப் பாதுகாத்து அன்பு செலுத்தியே வாழுகிறார்கள் என்று கூறும் ஒரே ஒரு வேதமே இந்து வேதம்'',

... விரிவஞ்சி இந்தப் பதினெட்டு எடுத்துக் காட்டுகளுடன் நிறுத்துகிறோம்.

29. இந்து வேதம் என்பது நூற்றெட்டுப் (108) பூசை மொழி நூல்களையும், நாற்பத்தெட்டுப் (48) பூசை விதி நூல்களையும், தொண்ணூற்றாறு (96) தத்துவ நூல்களையும், நூற்றிநாற்பத்துநான்கு (144) செயல் சித்தாந்த நூல்களையும் உடைய ஒன்றாகும். அதாவது, இந்த நான்கு வகைப்பட்ட நூல்களின் கூட்டுத் தொகையான முன்னூற்றுத் தொண்ணூற்றாறு (396) என்பது இந்து வேதத்தைக் குறிக்கக் கூடிய ஓர் அருளூறு எண்ணிக்கையாகும். இந்த எண்ணிக்கையை மிகவும் புனிதமானதாக, கடவுட் தன்மை உடையதாக, தெய்வீக ஆற்றல், உடையதாக அருட் பாதுகாப்பு வழங்கக் கூடிய ஒன்றாக அறிவிக்கிறது இந்துவேதம் அறிவிக்கிறது இந்துவேதம், அறிவிக்கிறது இந்துவேதம்.

30. இந்து வேதத்தின் செயல் வடிவான இந்துமதம், 'தன்னால் உருவாகின்ற அல்லது உருவாக்கப்படுகின்ற **அருளாற்றல்களைச் சேமித்து அல்லது தேக்கி வைத்து உலகுக்கு வழங்குகின்ற சாதனம் அல்லது பாண்டம் தான், சக்கரம் எனப்படுவது'**. இந்தச் சக்கரம் மூன்று பெரும் வகைகளை உடையதாகும். அதாவது, அலிநிலை ஆற்றல், பெண்நிலைஆற்றல், ஆண்நிலைஆற்றல் என்று மூன்று பெரும் வகையான ஆற்றல்களை உடைய சக்கரங்களையே அருளுலகின் முக்கோண அருட்பீடமாக உருவாக்கித் தருகிறது. இந்து மதம், இதில் அலிநிலைக்குரிய திருப்பதிச் சக்கரம் என்பது நூற்றெட்டு (108) வகைப்படும்; பெண்நிலைக்குரிய சக்தி பீடச்சக்கரம் என்பது இருநூற்றி நாற்பத்து மூன்று (243) வகைப்படும்; ஆண் நிலைக்குரிய சீவாலயச் சக்கரம் என்பது ஆயிரத்தெட்டு (1008) வகைப்படும். இவை மூன்றின் கூட்டுத் தொகையான ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்தொன்பது (1359) என்ற எண்ணிக்கை-

யும்; இவை ஒவ்வொன்றுக்கும் உரிய 108, 243, 1008 என்ற மூன்று எண்ணிக்கைகளும் சேர்த்து மொத்தமுள்ள நான்கு எண்ணிக்கைகளும் புனிதமானவைகளாக கடவுட்-தன்மை உடையவைகளாக, தெய்வீக ஆற்றல் உடைய-வைகளாக, அருட்பாதுகாப்பு வழங்கக் கூடியவைகளாக இந்து மதம் அறிவிக்கிறது.

31) இந்து வேதம் தன்னுடைய நான்கு வகைப்பட்ட வேதநூல்களின் எண்ணிக்கைகளின் கூட்டுத் தொகையான முன்னூற்றுத் ''தொன்னூற்றாறு' (396) என்ற எண்ணிக்-கையோடு இந்து வேதத்திற்குரிய மூன்று வகைப்பட்ட சக்-கரங்களின் எண்ணிக்கைகளான நூற்றெட்டு (108), இருநூற்றி நாற்பத்து மூன்று (243), ஆயிரத்தெட்டு என்ற எண்ணிக்கைகளையும்; இம் மூன்றின் கூட்டுத் தொகை-யான ஆயிரத்து முன்னூற்றி ஐம்பத்தொன்பது (1359) என்ற எண்ணிக்கையையும் சேர்த்து ஆகமொத்தம் ஐந்து எண்ணிக்-கைகளை அதாவது எண்களை இந்து வேதத்தின் புனித மானவைகளாக, கடவுட்தன்மை உடையவைகளாக தெய்-வீக ஆற்றல் உடையவைகளாக, அருட்பாதுகாப்பு வழங்கக் கூடியவைகளாக அறிவிக்கிறது, அறிவிக்கிறது, அறிவிக்-
எனவேதான், இந்து ஐந்து எண்ணிக்கைகளே 'நமசிவாய', 'பராசத்தி' 'சிவாயநம' எனும் ஐந்தெழுத்துப் பூசைமொழி வாசகங்களுக்குரியனவாக அறிவிக்கிறது இத்து வேதம். இருந்த போதிலும், இந்த மூன்று பூசை மொழிகளில் ஒவ்-வொரு பூசை மொழியை எழுதும் பொழுதும் எந்தெந்த எழுத்துக்கு எந்தெந்த எண்ணிக்கையை உரியதாகப் பயன் படுத்த வேண்டும் என்ற பேருண்மை பதினெண் சித்தர்-களுக்கும், பதினெண் சித்தர் பீடாதிபதிகளுக்கும் மட்டுமே தெரிந்திருக்கக்கூடியவைகளாக மறைத்துப் பாரம்பரியமாகப் பாதுகாக்கப் படவேண்டும் என்று அறிவிக்கிறது. இந்து வேதம். ஏனென்றால், இத்பேருண்மைகள் அளப்பரிய பேராற்றல்களை அருளுலகில் தோற்றுவிக்கக் கூடியவை. இவற்றால்தான் கருவறை, வெட்ட வெளிக் கருவறை, வழிபாட்டு நிலையக் கருவறை, கோயில்களின் மூலக் கரு-வறை எனும் நான்கு வகைப்பட்ட கருவறைகளும் உயிர்ப்புச்



செய்யப்படுவதும், புத்துயிர்ப்புச் செய்யப்படுவதும் நிகழ்த்தப் பட முடியும். எனவேதான், இந்து மதம் ஒன்றின் மூலம் தான் அருவங்களை வழிபடல், அருவுருவங்களை வழி-படல், உருவஅருவங்களை வழிபடல், உருவங்களை வழிபடல் எனும் நான்குவகையான வழிபாட்டு முறை-களும் நெறிகளும் சிறப்பாக செயல்படுத்தப் படு-கின்றன. ''அதாவது, கடவுள்களாலேயே எழுதித் தரப்-படுகின்ற இந்து வேதம் ஒன்றில் தான் அல்லது ஒன்றின் மூலம் தான் அருவங்களையும், அருவுருவங்களையும், உருவ அருவங்களையும், உருவங்களையும் வழிபட்டுப் பத்தி, சத்தி, சித்தி, முத்தி எனும் நான்கினையும் பெறுவதற்குரிய முறை-களும், நெறிகளும் இருக்கின்றன, இருக்கின்றன, இருக்-கின்றன. இன்னும் சொல்லப்போனால், இந்து வேதம் தவிர வேறு எந்த ஒரு வேதத்தாலும் கல், மண், மணல் முதல் அனைத்து வகையான பயிரினங்கள், உயிரினங்கள் முடிய உள்ள அனைத்தையும் கடவுள்களாக்கி வழிபட்-டுப் பயனடையும் முறையும் நெறியும் அறிவிக்கப்-படவில்லை, அறிவிக்கப்படவில்லை, அறிவிக்கப்பட-வில்லை. இம்மாபெரும் பேருண்மையை அடிப்படை-யாகக் கொண்டுதான் ''இந்து வேதமே முழுமையான வேதம்'', 'இந்து வேதமே முறையான வேதம்'', ''இந்து வேதமே நெறியான வேதம்'', ''இந்து வேத-மே நிறைவான வேதம்'' என்ற வாசகங்கள் இந்து வேதத்தின் எல்லா நூல்களிலும் தவறாமல் குறிக்கப்படு-கின்றன. இன்னும் சொல்லப் போனால், இந்து வேத நாயகமாக, இந்து வேத பீடமாக, இந்து மதத் தந்தை-யாக, இந்துமதத் தலைமை ஆச்சாரிய மடமாக, இந்து மதத்தின் முழுமுதற் தலைமைக்குரு பீடமான பதினெண் சித்தர் பீடமாக, ஞானச்சாரியாராக விளங்கிடும், குரு-மகாசன்னிதானம், ஞால குரு சித்தர் கருவூரர் அவர்கள் எழுதுகின்ற குருபாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், அரச

பாரம்பரியம் எனும் முப்பெரும் தொடர் நூல்களில் இந்து மதம் பற்றிய இவ்வாசகங்கள் பல இடங்களில் குறிக்கப் படுவதே மரபாகும். இவை போன்ற எண்ணற்ற வாசகங் களை, இந்து வேதம் பற்றி எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியான குருமகாசன்னிதானம் ஞால குரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்களும் பதினோ-ராவது பதினெண் சித்தர் பீடாதிபதியான குருமகாசன்னி-தானம் ஞால குரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களும் இந்து வேதம் பற்றி எழுதும் குறிப்பேட்டை நிறைவு செய்கிறார்கள். இவர்கள், இருவர்தான், கலியு-கத்தில் தோன்றியவர்கள். முதல் யுகம் முடிந்து இரண்டா-வது யுகம் ஆரம்பித்தபோது தோன்றிய பதினெண் சித்-தர் பீடாதிபதிகளும்; இரண்டாவது யுகம் முடிந்து மூன்-றாவது யுகம் ஆரம்பித்தபோது தோன்றிய பதினெண் பீடாதிபதிகளும், மூன்றாவது யுகம் முடிந்து இந்த நான்-காவது யுகம் ஆரம்பித்தபோது தோன்றிய இரண்டு பீடாதி பதிகளும் இந்து வேதம் பற்றிய இந்தக் குறிப்பேடுகளை விட மிகமிகப் பெரிய அளவில் நன்கு விரிவாகவே இந்து வேதக் குறிப்பேடுகளை எழுதியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இன்றைய சூழ்நிலையில் விரி-வாக இந்து வேதத்தையும் இந்து மதத்தையும் விளக்க வேண்டிய அவசியம் இல்லை என்று இப் பீடாதிபதிகளின் முடிவு. இவர்களிருவர்களின் முடிவுகளை அப்படியே ஏற்-றுத்தான் இன்றுள்ள இந்து வேத நாயகம், இந்து வேத பீடம், இந்து மதத் தந்தை, இந்து மதத் தலைமை ஆச்சா-ரிய மடம், இந்து மதத்தின் முழுமுதற் தலைமைக் குரு-பீடமான பதினெண் சித்தர் பீடம், ஞானச்சாரியார் குரு-மகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூ-ரார் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதியவர்-கள். அப்படியே முழுமையாக ஏற்றுச் செயல்படுத்துகிறார்.



# இந்து வேத மதமான இந்துமதம்

1. 'இந்து', 'வேதம்', 'மதம்', 'இந்துவேதம்', 'இந்துமதம்' என்ற ஐந்து சொற்களுக்கும் இந்து வேதத்-தின் 'பூசை மொழி', 'பூசை விதி', 'தத்துவம்', 'செயல் சித்தாந்தம்' எனும் நான்கு வகைப்பட்ட நூல்களிலும் மிக மிகத் தெளிவான, எளிமையான, வரையறை செய்து முடிவு செய்யப்பட்ட பொருள் விளக்கங்களும், கருத்து விளக்கங்-களும், செய்திகளும் தரப்பட்டிருக்கின்றன. எனவே '**இந்து வேதமதமான இந்துமதம்**' என்ற சொற்றொடர் முறை-யான, நெறியான, நிறைவான பொருளை முழுமையாகத் தர கூடியதாக இருக்கின்றது.

2. **இந்துமதமும் ஆதிசிவனாரும்** : முதன்முதல் இம்-மண்ணுலகுக்கு 'இளமுறியாக் கண்டத்து பஃறுளியாற்றங் கரைத் தொன் மதுரையில் முத்தமிழ்ச் சங்கத்தையும், பதி-னெண்சித்தர் மடம் பீடம் கருகுலத்தையும் முழுமையாக நிறுவி அரசியல் சட்டப் பூர்வமாக இந்து வேதமதமான இந்து மதத்தை அறிவித்தவர் '**ஆதிசிவனார்**' என்பவர் ஆவார். இவரே, 'முதல் **யுகத்திலிருந்த மூலப் பதினெண் சித்தர்களின் தலைவர்**' ஆவார். எனவே இவர், முதல் பதினெண் சித்தர் பீடாதிபதியாக அருளுலகத்தவர் அனை-வராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

3. இந்த ஆதிசிவனாரே இம்மண்ணுலகைப் பொறுத்த வரை முதலில் முடிசூடிய அரசராவார், மன்னனாவார், வேந்தனாவார். "**இவருடைய அரசு பண்டைய அரசு எனும் பொருள்பட 'பாண்டிய அரசு' என்றழைக்கப் பட்டது**". இவர் ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், இரங்கல் எனும் ஐந்தொழில்களையும் செய்யும் வல்லமை பெற்று விளங்கினார். இவர், தனக்குத் துணையாக இருந்த அனைத்து வகைப்பட்ட அருளுலகத்தவர்களுடன் சேர்த்து இம்மண்ணுலகில் அருளுலகத்திற்குரிய அல்லது அருளு-லகத்திற்குத் தேவைப் படுகின்ற அனைத்து வகைப்பட்ட

அருவங்கள், அருவுருவங்கள், உருவஅருவங்கள், உருவங்கள் எனும் நான்கினையும் இவற்றின் நான்கு வகைப்பட்ட செயல் வடிவங்களான திருக்கல், தருக்கல், கருக்கல், குருக்கல் எனும் நான்கு வகையினரையும் ஆக மொத்தம் பதினாறு வகைப்பட்ட அருளுலகத்தவர்களையும் தோற்றுவித்தார். அத்துடன் இவரே, இவர்களின் வாழிடங்களான நாற்பத்தெட்டு வகைக் கருவறைகள், நாற்பத்தெட்டுவகை வெட்டவெளிக் கருவறைகள், நாற்பத்தெட்டுவகை (48) வழிபாட்டு நிலையக்கருவறைகள், நாற்பத்தெட்டுவகை (48) கோயில் மூலக்கருவறைகள் எனும் நான்கு வகை வாழிடங்களையும், ... தோற்றுவித்துத் தாயின் கருவில் குழந்தை வளர்ந்து பிறந்து பால்குடிக்கும் பருவம் வரை தாயின் மடியிலேயே வளர்வது போல் இவைகளை நன்கு வளர்த்துக் காத்து உலகில் செயல்படச் செய்யும் பொறுப்பையும் ஏற்றார். எனவேதான், ''அருளுலகத்திற்குத் தேவையான அனைத்தையும் கருவாக்கி, உருவாக்கித் தரும் செயல்களை இரவில் செய்யக் கூடிய திங்கள் குலத்துக்குரியவர்; (சந்திர குலத்திற்குரியவர், மதிகுலத்திற்குரியவர்) இச்சிவனார்''

4. **இந்த திங்கள் குலத்துச் சிவனாருக்கு அருளுலக ஆட்சிப் பணிக்காக மூலப் பதினெண் சித்தர்களிலிருந்தே சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.** இந்தச் சிலரிலும் சிலருடைய பெயர்கள் மட்டுமே வெளியிடப்படுகின்றன. **''மூலப் பதினெண் சித்தர்கள் யார் யார் என்ற பெயர் பட்டியல் விவரம் பதினெண்சித்தர் பீடாதிபதிகளைத் தவிர மற்ற யாருக்கும் தெரியக்கூடாது; தெரிவிக்கப்படவும் கூடாது''** என்று மூலப் பதினெண் சித்தர்களே மிகத் தெளிவாகக் கட்டளையிட்டிருக்கிறார்கள். அதாவது, **இந்து வேதத்தையும், இந்து மதத்தையும் பொறுத்தவரை குறிப்பிட்ட கருத்துக்கள், செய்திகள், செயல் நடைமுறைகள், உண்மைகள் ...** குறிப்பிட்டவர்களன்றி **அல்லது** தேர்ந்தெடுக்கப்பட்டவர்களன்றி



**மற்றவர்கள் தெரிந்து கொள்ளக்கூடாது''.** இப்படி, ''குறிப்பிட்டவர்களன்றி மற்றவர்கள் தெரிந்து கொள்ளக் கூடாது என்று ஆணையிடப்பட்டுக் காக்க படுபவை அனைத்தும், மறைத்துக் காக்கப்பட வேண்டியவை என்ற பொருளை உடைய **'மறை'** என்ற சொல்லால் பெயரிடப்படுகின்றன. **'இந்த மறைகளே இந்துவேதமும் இந்துமதமும் என்றென்றும் நிலைத்து நிற்கும்படிக் காத்து வளர்த்து வருகின்றன'** என்பதுதான் உண்மை, உண்மை, உண்மை''.

5. **அருளுலகில்** ஆதிசிவனாரின் அருளாட்சிக்குத் துணையாக **அமைச்சர்** என்ற நிலையில் கருவூரார், காக்கையர் எனும் **காகபுசுண்டர்** எனும் இருவரும் மற்றும் சிலரும் நியமிக்கப்பட்டனர். இவர்களைப் போலவே அருளாட்சியின் காவல் பொறுப்புகளையும், பாதுகாப்புப் பொறுப்புகளையும் கவனிக்க மாயோன் (திருமால், பெருமால், நெடியோன்' என்ற மாற்றுச் சொற்களும் மாயோன் ... என்ற சொல்லுக்கு உண்டு) எனப்படும். ஒரு மூலப் பதினெண்சித்தர் நியமிக்கப் பட்டார். அடுத்து இம்மண்ணுலகிலுள்ள பிறப்புக்கள் **அனைத்திற்கும்** பொறுப்பாக இருந்து இம்மண்ணுலகின் **பிறப்புத்** தொழிலை நிர்வகிக்கும் பணி **'பிறமண்'** என்ற **ஒரு மூலப்பதினெண்சித்தரிடம்** ஒப்படைக்கப்பட்டது. இம்மண்ணுலகின் அனைத்து வகைப்பட்ட பயிரின உயிரினங்களுக்குரிய இயக்கங்களுக்கும் வாழ்நாட்களுக்கும், **ஆயுட்காலங்களுக்கும்** அவ்வப்போது முடிவுகட்டி; உலகின் இயக்க **நிலைகள்,** பெரும், சுமையாகிவிடாமல் பாதுகாத்திடும் **பொறுப்பு** இயக்கங்களுக்கும் ஆயுட்காலங்களுக்கும்' முடிவு **கட்டும் (**முடிவு, இறுதி, தோல்வி, நிறைவு, இறப்பு, சாவு,...**என்ற** பொருள்கள் மண் என்ற சொல்லுக்குஉண்டு, எனும் **பொருள் படும்** இயமண்(எமண், தென் திசைக்கோன்) தருமண்,... **என்ற** மாற்றுச்சொற்கள் இயமண் என்ற சொல்

லுக்கு உண்டு) என்ற பெயரை உடைய மூலப்பதிணெண்-சித்தர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதேபோல் பொருளாதாரத்துக்குரிய அனைத்து வகையான நிறுவன நிர்வாக இயக்கப் பொறுப்புக்களை முழுமையாகக்கவனித்துக் கொள்ளும் 'குபேரன்' (குப்பை, குப்பன், குப்பம், குபேரம், ... முதலிய சொற்கள் செல்வம், பொருள் வளம், ... என்ற பொருட்களைத் தருவனவாகும். இந்தச் சொற்களின் அடிப்படையில் தான் 'குபேரன் என்ற சொல் உருவாக்கப்பட்டது) என்ற ஒரு மூலப் பதிணெண்சித்தரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதேபோல், பொதுவாக அருளுலகிலுள்ள கணபாடிகள் முதல் கடவுள்கள் வரை உள்ள நாற்பத்தெட்டு (48) வகை தரதிரதிறப் பிரிவுக்குட்பட்ட கடவுள்களையும்; மண்ணுலகில் தோன்றக் கூடிய சுரர், அசுரர், அரக்கர், இராக்கதர் ... முனிவர், இருடி, தவசி, ஞானி, பத்தியார், சத்தியார், சித்தியார், முத்தியார், சித்து விளையாடல்காரர், ... முதலியவர்களையும் இணைத்துப் பிணைத்துத் தொடர்புபடுத்தி அருளுலக நிறுவன நிர்வாகங்களையெல்லாம் முழுமையாகக் கவனித்துக்கொள்ளும் பொறுப்பை பொருளாழமிக்க 'இந்து' என்ற சொல்லோடு தரம், திரம், திறம் என்ற தமிழின் மூன்று வகைப்பட்ட பண்புநிலை விளக்கச் சொற்களைச் சேர்த்து உருவான 'இந்திரன்' என்ற பெயர்ச் சொல்லை பேராக உடைய 'இந்திரன்' என்ற (இந்த இந்திரன் என்ற பெயர் இந்தரன் என்றும் இந்திரன் என்றும் குறிப்பிடுவது மரபு) ஒரு மூலப் பதிணெண் சித்தரிடம் ஒப்படைக்கப் பட்டது;... என்று இந்த மிகச் சில மூலப் பதிணெண் சித்தர்களுடைய பெயர்கள் மட்டுமே வெளிப்படையாக இந்து வேத நூல்களிலும் இந்து மத நூல்களிலும் குறிக்கப்படுகின்றன, குறிக்கப் படுகின்றன, குறிக்கப் படுகின்றன. இப்படி இந்துவேதம், இந்து மதம் அல்லது இந்து வேத மதமான இந்துமதம் முதலியவை பற்றிய விளக்கமான வரலாறுகள் வழங்கப்பட்டிருக்கின்றன, வழங்கப்பட்டிருக்கின்றன, வழங்கப்பட்டிருக்கின்றன.

---

# இந்து, வேதம், மதம், இந்து வேதம் இந்து மதம்

1. 'இந்து' என்ற சொல்லுக்கு விந்து, உயிரணு, உயிர், உயிரின் கரு, திங்கள் (நிலவு, சந்திரன்), அன்பு, அழகு, அருள், அடக்கம், அமைதி, அமுதம், அரிது, அறிவு, அளப்பரியது, அடைதற்கரியது, அடைக்கலம், அந்தம், அண்டம், அண்டபேரண்டம், அருவம், அருவுருவம் ... ; ஆற்றல், ஆர்வம், ஆக்கம், ஆதரவு, ஆதவன் ஆவி, ஆன்மா, ஆருயிர், ஆண்டவன், ஆகமம், ஆரணம், ...; இறை, இன்பம், இயற்கை, இசைவு, இயக்கம் ... ; ஈவு, ஈர்ப்பு, ஈசன், ஈதல் ...; உண்மை, உய்வு, உயர்வு, உயிர், உரிமை, உறவு, உற்சாகம், உருவம், உருவஅருவம், உலகம், உள்ளொளி, ...; ஊக்கம், ஊற்றுக்கண், ஊடகம் ...; எல்லா, எச்சம், எழுந்தருளி ...; ஏற்றம், ஏந்து, ஏகம் ...; ஐயன், ஐந்தரம், ஐந்திரம், ஐந்திறம், ஐம்பூதம், ஐந்தெழுத்தான் ... ; ஒலி, ஒளி, ஒண்மை, ஒட்பம், ஒழுக்கம், ஒன்றுதல், ஒற்றுமை ...; ஓமம், ஓகம், ஓதம், ஓதுதல், ஓங்காரம் ...; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, கடவுள், கல்வி, கன்னி, கரு, கதை, காதை, கவிதை (காவியம், காப்பியம்), கீதை ...; சத்தி, சத்து, சத்தியம், சமயம், சமுதாயம், சமத்துவம், சகோதரத் தத்துவம், சமாதானம், சந்திப்பு, சங்கமம், சங்கம், சித்து சித்தம், சிவன், சுருதி ...; தமிழ், தலைவன், தன்னொளி, தரு, தண்ணீர், தன்னையறிதல், தலைவனையறிதல், தவம், திரு ...; பற்று, பந்தம், பண்பு, பதி, பசு, பழக்கம், பராசத்தி, பசுமை, பிறமண், பிண்டம், பேரண்டம், பகலவன், பகவதி, பாசம், பாவை, பூ, பூசை, போதம் ...; ஞானம், ஞாலம், ஞாயிறு ...; நலம், நல்வாழ்வு, நம்பிக்கை, நட்பு, நமசிவாயம், நங்கை, நாயகி, நாராயணன், நேமம், நிய-

மம், நிடதம், நிட்டை, நீதி, நாதம், நெறி ..; மனம், மதம், மகிழ்ச்சி, மறை, மகாசத்தி, மகேசுவரன், மகேசு-வரி, மங்கை, மறை, முறை, மீமாம்சை ...; யக்ஞம், யாகம், யோகம் ...; வள்ளல், வள்ளண்மை, வல்லமை, வணக்கம், வாழ்த்து, வெற்றி, வேகம், வேதம், வேள்வி, வையகம் ...; என்று விரிவஞ்சி தமிழிலுள்ள முதன்மை-யான எழுத்துக்கள் ஆரம்பமாகக் கொண்ட சில சில சொற்கள் மட்டும் இங்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்-றன. இவை போன்று நூற்றுக்கணக்கில் ஏராளமான சொற்கள் 'இந்து' என்ற சொல்லுக்கு பொருள் கூறுவன-வாக மூன்றாவது யுகத்திற்கு முன்பே இருந்ததாக ஒன்பதா வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் வைகையாற்றங்கரைக் கருவூரார் அவர்-களும், எட்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் தாமிரபரணியாற்றங்-கரைக் கருவூரார் அவர்களும் குறிக்கிறார்கள். இப்படி, இந்த 'இந்து' என்ற ஒருசொல் ஓர் ஒப்புயர்வற்ற பொருட்செறிவும், பொருளாழமும் மிக்க அழகிய இனிய அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ்ச் சொல்லாகும். இந்த 'இந்து' எனும் சொல்லே அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்களுடைய தத்துவங்களையும், செயல் சித்-தாந்தங்களையும், கொள்கைகளையும், குறிக்கோள்களையும் கோட்பாடுகளையும், சாதனைகளையும், போதனைகளையும், அருட்கொடைகளையும் முழுமையாகக் குறிக்கின்ற ஒரே ஒரு சொல்லாகும்'

2. இப்படி, 'இந்து' என்ற சொல் பதினெண்சித்-தர்களின் அருளுலகப் பொருளுலக படைப்புக்களையும், அடைவுகளையும், உறவுகளையும், உரிமைச் சுற்றங்களையும், உரிய நண்பர்களையும், தோழர்களையும் ...; முழுமையாகக் குறிக்கின்ற ஒரு சொல்லாக இருப்பதால்தான்; 'வேதம்' என்ற சொல்லை இந்த 'இந்து' என்றசொல்லோடு சேர்த்து 'இந்துவேதம்' என்ற 'அருளுலக ஏட்டறிவு' வடிவப்படுத்தப்பட்டது அல்லது உருவாக்கப்பட்டது. இதேபோல, இந்த 'இந்து' என்ற சொல்லோடு 'மதம்' என்ற சொல் சேர்க்கப்பட்டு 'இந்துமதம்' என்ற 'அருளு-லகப் பட்டறிவு' வடிவப்படுத்தப்பட்டது அல்லது உரு-வாக்கப்பட்டது. இவை இரண்டுதான், அருளுலகுக்கும் கண்களாக விளங்குகின்றன; பொருளுலகுக்கும் கண்க-ளாக விளங்குகின்றன.



3. 'வேதம்' என்றால் 'வேதிக்கப்பட்டது' 'சமைக்கப்பட்டது', 'பக்குவப்படுத்தப்பட்டது', பதப்படுத்தப் பட்டது' 'பண்படுத்தப்பட்டது', 'முழுமையான வளர்ச்சியைப் பெற்றது', 'தேவையான முதிர்ச்சியைப் பெற்றது' 'சுவைமிக்கது' 'பயன்மிக்கது' 'இன்றியமையாதது' 'சிறந்த துணையாக இருப்பது' 'நல்ல வழியாக இருப்பது' 'நல்ல வழிகாட்டியாக விளங்குவது' 'வழித்துணையாக இருப்பது' 'வழிப்பயனாக நிற்பது' 'உயிர் போன்றது' 'வாய்மையானது' 'மெய்மையானது' 'தூய்மையானது' 'துயரத்தைப் போக்க வல்லது' 'துன்பத்தைத் தடுத்து உடனடியாக அகற்ற வல்லது' 'உய்வினைத் தரக்கூடியது' 'உயர்வானது' 'உண்மையானது' 'உற்சாகத்தைத் தரக் கூடியது' 'உள்ளொளி வழங்குவது' 'உலகு காப்பது, 'தொய்வினை நீக்க வல்லது' 'சோர்வினை மாற்ற வல்லது' 'அச்சத்தை அழிக்க வல்லது' 'கடவுளால் கூறப்படுவது, 'கடவுளைப் பற்றிக் கூறுவது' ... என்று பல பொருள்கள் உண்டு எனவேதான் 'இந்துவேதம்' என்ற சொல்லுக்கு இந்து என்ற சொல்லுக்குரிய பொருள்களும், 'வேதம்' என்ற சொல்லுக்குரிய பொருள்களும் இரண்டறக் கலக்-கப்பெற்று எண்ணற்ற புதுபுதுப் பொருள்களும், இரண்-டுக்குமுரிய பொருள்களும் கூறப்படுகின்றன குறிப்பாக.

இந்துவேதம்' என்றால் 'அழியாதது' 'செழிப்பானது' 'கொழுமையானது' 'வளமானது' 'வலிமையானது' 'வாலிப்பானது' 'பொலிவு மிக்கது' 'விழிச்சிக்குரியது' 'எழிச்சிக்குரியது' 'பயிற்சிக்குரியது' 'முயற்சிக்குரியது' 'உயர்ச்சிக்குரியது' 'மலர்ச்சிக்குரியது' 'மறுமலர்ச்சிக்குரியது' 'வளர்ச்சிக்குரியது' 'ஆட்சிக்குரியது' 'மாட்சிக்குரியது' 'மீட்சிக்குரியது' 'கடவுளைக்காண உதவுவது' 'மனிதனைக் கடவுளாகவே காணவல்லது 'கடவுளை உடனடியாக உதவிக்கு வரவழைப்பது' 'அருளுலகோடு உறவு கொள்ள உதவுவது' 'பிறப்பிறப்பை வெல்ல உதவுவது' 'பேரின்பத்தைத் தர வல்லது' 'எதையும் கடவுளாக்கும் வல்லமை பெற்றது' 'எல்லாக்'கடவுள்களோடும் தொடர்பு கொள்ள உதவுவது' 'எல்லாவகையான போதனைகளையும் தரவல்லது' ... என்றிப்படி எண்ணற்ற புதிய புதிய பொருள்கள் கூறப்படுகின்றன. இதனால் தான், பதினெண்சித்தர்கள் இந்து வேதத்தை எந்த உலகுக்கும் முதன் முதலிலேயே வழங்குகின்றவர்களாக இருக்கின்றார்கள். அதாவது, புதிதுபுதிதாக தோன்றக்கூடிய எந்த உலகானாலும்சரி; அந்த உலகில் தோன்றிடக் கூடிய பயிரினங்களும், உயிரினங்களும் பண்பட்டு, தூய்மைப்பட்டு. வாய்மைப்பட்டு உய்வடைவதற்காக இந்துவேதத்தை முதன்முதலிலேயே வழங்குகிறார்கள் பதினெண்சித்தர்கள்.

4. இந்த, 'இந்துவேதத்தில் உள்ள எழுத்துக்களும், சொற்களும், சொற்றொடர்களும் உரத்த குரலில் ஓதப்பட்டு எழுப்பப்படுகின்ற 'ஒலி அலைகள்' தான்; பிண்டத்தை, மற்ற பிண்டங்களோடும் அண்டங்களோடும் பேரண்டங்களோடும், அண்டபேரண்டங்களோடும், இணைத்துப் பிணைக்கிறது'' இதே போல் இந்த ''இந்துவேத 'ஒலி அலைகள்தான் ஒவ்வொரு மனிதனுடைய முற்பிறப்பு, மறுபிறப்பு இப்பிறப்பு ஆகிய மூன்றையும் இணைத்துப் பிணைத்து; இவற்றின் நல்லவை அல்லவைகளைக் கூட்டிக்



கழித்து நிகழ்கால நடைமுறை வாழ்வுக்குரிய பொருளை விளக்குகின்றன'. இதே போல், இந்த இந்து வேத 'ஒலி அலைகள்தான்' இறைவன் அல்லது கடவுள்' என்பதையும்; மனிதனுடைய உயிரையும், மனிதனுடைய சொந்த, பந்த பற்றுக்களால் உருவாகும் பாசம் என்பதையும் இணைத்து மனிதனுக்குத் தேவையான அருளுலக வாழ்வுக்குரிய பக்குவங்களை விளைவித்துத் தருகின்றன. இதனை விளக்கமாகக் கூற வேண்டுமென்றால்; 'இந்து வேதத்தின் எழுத்து, சொல், சொற்றொடர் எனும் மூன்றும் உரத்த குரலில் ஓதப்பட்டு எழுப்பப்படும் ஒலி அலைகளால்தான் மனித வாழ்வுக்குத் தேவையான பத்தி, சத்தி, சித்தி, முத்தி எனும் நான்கும் படிப்படியாகக் கிடைக்கின்றன, இந்த இந்து வேதத்தின் எழுத்து, சொல், சொற்றொடர் முதலிய மூன்றும் மனிதனுடைய ஆவி, ஆன்மா, ஆருயிர் என்ற மூன்றுக்கும் சமமானவை; இந்த இந்து வேதம் எழுத்து, சொல், சொற்றொடர் எனும் வரிவடிவங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டு விரிந்து பரந்து எங்கும் வெகு வேகமாகச் செல்லக்கூடிய ஒலியாகத்தான் வாழுகிறது. எனவே, இந்து வேதத்தை எழுத்துக்களின் வரிவடிவங்களுக்குள்ளோ அல்லது சொற்களின் பொருள் வடிவங்களுக்குள்ளோ அல்லது சொற்றொடர்களின் கருத்துவிளக்க எல்லைகளுக்குள்ளோ உள்ளடக்கிக் கண்டிட முயலக் கூடாது, முயலக் கூடாது, முயலக் கூடாது, முயலவே கூடாது என்று மூலப்பதினெண் சித்தர்களாலும் பதினெட்டாம்படிக் கருப்புகளாலும் மிகமிகத் தெளிவான வரையறுக்கப்பட்ட கருத்து அறிவிக்கப்பட்டிருக்கிறது, அறிவிக்கப்பட்டிருக்கிறது, அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதுவே இந்து வேதத்தின் அளப்பரிய எல்லையற்ற விரிந்து பரந்துபட்ட அரியபெரிய உயரிய, சீரிய, வீரிய, நேரிய நிலைமைகளை விளக்குகிறது, விளக்குகிறது, விளக்குகிறது.

5. **‘மதம்’**: அண்டபேரண்டம் ஆளும் மூலப் பதினெண்சித்தர்கள் ‘மதம்’ என்ற சொல்லுக்கு தமிழ், அமிழ்து, உயிர், முழுமையானது, ‘நிறைவானது’ ‘நிம்மதியானது’ ‘அன்பானது’, ‘அடக்கமானது’, ‘அமைதியானது’, ‘அழகானது’, பயன்மிக்கது ‘சுவைமிக்கது’ ‘ஒப்புயர்வற்ற நல்லவழி’ ‘நல்ல வழிகாட்டி’ ‘நல்ல வழித்துணை’ ‘அரிய வழிப்பயன்’ ‘பண்பட்ட ஒழுகலாறு’ ‘முழுமையான தத்துவம்’ ‘பயன்மிக்க செயல் சித்தாந்தம்’ ‘முறையான மனித வாழ்வு’ ‘பத்திப்பாட்டை’ ‘சத்திச் சாலை’ ‘சித்திச் சோலை’ ‘முத்தி மன்றம்’ ‘தவப்பள்ளி, ‘வேள்விக் கூடம்’ ‘அருட்கோட்டம்’ ‘கடவுளைக்காணும் வழி’ ‘கடவுளோடு உறவு கொள்ள உதவும் சாதனம்’ ‘அருளாளர்களின் சாதனை’ ‘அக வாழ்வுக்கும் புறவாழ்வுக்கும் நிம்மதியையும், நிறைவையும் தரும் அருமருந்து’ ‘மனித வாழ்வுக்கு சமத்துவத்தையும், சமாதானத்தையும், சகோதரத் தத்துவத்தையும் தரும் தத்துவ வித்து’ ‘மனித வாழ்வுக்கு பேரின்பத்தைத் தரும் பெரும் விருந்து அரும் மருந்து’ ... என்று எண்ணற்ற சொற்களாலும், சொற்றொடர்களாலும் பொருள் கூறுகிறார்கள். இப்படி மூலப் பதினெண்சித்தர்கள் ‘மதம்’ என்ற சொல்லுக்கு கணக்கற்ற சொற்களாலும் சொற்றொடர்களாலும் பொருள் கூறுவதிலிருந்து” ‘மதம்’ என்ற சொல் ஓர்ஒப்புயர்வற்ற அரிய பயன்மிக்க சீரிய செந்தமிழ்ச்சொல்’ என்ற பேருண்மை விளங்குகிறது.

6. இந்த பொருளாழம்மிக்க சீரிய செந்தமிழ்ச் சொல்லான மதமென்ற சொல்லை பொருளாழமிக்க அழகிய இனிய செந்தமிழ்ச் சொல்லான ‘இந்து’ என்ற சொல்லோடு சேர்த்து இந்து மதம் என்ற ஒரு சொல் உருவாக்கப் பட்டிருக்கிறது. அதாவது, மூலப் பதினெண் சித்தர்கள் ஆழச் சிந்தித்தும், நீள நினைத்தும்தான் இந்த



‘இந்துமதம்’ என்ற சொல்லை உருவாக்கியிருக்கிறார்கள், உருவாக்கியிருக்கிறார்கள், உருவாக்கியிருக்கிறார்கள். அதன் பயனாகத்தான் இந்த இந்துமதம் பிண்டங்கள், அண்டங்கள், பேரண்டங்கள், அண்டபேரண்டங்கள் அனைத்திற்கும் உயிர்மூச்சான இந்துவேதத்தின் செயல்வடிவமாக வாழுகிறது, வாழுகிறது, வாழுகிறது. ‘இந்த அரிய கருத்தை இந்தப் பெரிய செய்தியை’ ‘இந்துவேதமதமான இந்துமதம்’ என்ற சொற்றொடர் விளக்குகிறது. இந்தச் சொற்றொடர் மூலப் பதினெண்சித்தர்கள், பதினெட்டாம்படிக் கருப்புகள், அனைத்து வகைப்பட்ட சித்தர்கள், கடவுள்கள், வழிபடு நிலையினர்கள், ஆச்சாரியார்கள்,’பதினெண்சித்தர் பீடாதிபதிகள் ... முதலியவர்களின் எழுத்துக்களில் கணக்கற்ற முறை இடம் பெற்றிருப்பதன் மூலம் இந்து வேதத்தின் செயல் வடிவம்தான் இந்துமதம் என்பதைத் தெளிவாக அறியலாம், எளிமையாகப் புரியலாம், விளக்கமாக உணரலாம், இத்துடன், ‘இந்துமதம் என்று சொல்லப்படுகின்ற ஒரு மதம் திடீரென்று ஞானமோ, கடவுட்காட்சியோ, தெய்வீகச்சாட்சியோ, அருட்சித்தியோ அடைந்திட்ட ஒரு தனிமனிதனால் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றல்ல, ஒன்றல்ல, ஒன்றல்லவே அல்ல என்று இம்மண்ணுலகுக்கு இந்த இந்துமதத்தை அரசியல் பூர்வமாக அறிவித்த முதல் பதினெண்சித்தர் மடாதிபதியும், பீடாதிபதியும், ஞானாச்சாரியாருமான ஆதிசிவனாரின் வாசகத்தையும் இங்கு எண்ணிப் பார்த்திடல் வேண்டும், எண்ணிப்பார்த்திடல் வேண்டும், எண்ணிப் பார்த்திடல் வேண்டும். அப்பொழுதுதான், இந்துமதத்தின் அளப்பரிய, எல்லையற்ற விரிந்துபட்ட அரிய பெரிய சீரிய நேரிய வீரிய நிலைமைகளையெல்லாம் ஓரளவாவது தெரிய முடியும்; தெரியமுடியும்; தெரியமுடியும்; தெரிந்தறிய முடியும்; தெரிந்தறிய முடியும்; தெரிந்தறிய முடியும்; அறிந்து புரிய முடியும்; அறிந்து புரிய முடியும்; அறிந்து புரிய முடியும்;

புரிந்து உணர முடியும்; புரிந்து உணர முடியும்; புரிந்து உணர முடியும்.

7. 'இந்து இந்துமதத்தைப்' பற்றி முதல் பதினெண்சித்தர் பீடாதிபதியும் மடாதிபதியுமான ஞானாச்சாரியார் ஆதி சிவனாரும் அவரை அடுத்து பதினெண்சித்தர் மடாதிபதி பீடாதிபதியாகப் பொறுப்பேற்ற பதினோரு ஞாலகுரு சித்தர் கருவூரார்களும் வழங்கியுள்ள வாசகங்கள் இந்துமதத்தைப் பற்றிய வரலாறுகளையும், நடைமுறைகளையும், ஒழுகலாறுகளையும், மரபுகளையும், சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும் வாழ்வியலுக்குரிய உறவு முறைகளையும் உரிமை நெறிகளையும் ... தெளிவாக, எளிமையாக விளக்கமாக நேரடியாக விளங்குகின்றன, விளக்குகின்றன. விளக்குகின்றன. மேலும், 'இந்துமதம், ஒப்புயர்வற்ற முறையான, நிறைவான, வரலாற்றை உடைய ஒரு மதம்' 'இந்துமதம் ஒப்புயர்வற்ற முறையான நிறைவான நடைமுறைகளை உடைய ஒரு மதம்' 'இந்துமதம் ஒப்புயர்வற்ற முறையான, நிறைவான ஒழுகலாறுகளை உடைய ஒரு மதம்' 'இந்துமதம் ஒப்புயர்வற்ற முறையான மரபுகளை உடைய ஒரு மதம்' 'இந்து மதம் ஒப்புயர்வற்ற முறையான நிறைவான வாழ்வியலுக்குரிய உறவு முறைகளையும் உரிமை நெறிகளையும் உடைய ஒரு மதம்' ... என்றிப்படிப் பட்ட எண்ணற்ற வாசகங்கள் இந்து வேத நூல்களிலும் இந்துமத நூல்களிலும் ஏராளமாகக் கிடைப்பதால் இந்து மதத்தின் அருமை பெருமைகள், அரிய நிலைகள், பெரிய நிலைகள், சீரிய பயன்கள் ... முதலியவை தெளிவாகத் தெரிய வருகின்றன, ஆனால், இந்த இந்து வேத நூல்களும், இந்துமத நூல்களும் முழுக்க முழுக்க அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழியான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் இருக்கின்றன. எனவே தான், காலப்போக்கில், அன்னிய நாட்டவர்களும் அன்னிய மொழிகள் தமிழோடு சேர்ந்து உருவாக்கிய புதிய புதிய மொழிகளும் இந்து மதத்தில் புகுந்துவிட்ட காரணத்தினால் தமிழ் மொழியிலுள்ள இந்து வேதம் பற்றிய கருத்துக்களும், அருளூறு பூசைமொழிகளும், பூசை விதிகளும், இந்துமதம் பற்றிய கருத்துக்களும், இவை பற்றிய செய்திகளும் வரலாறுகளும், இலக்கியங்களும், அருட்கலைகளும், அருளுலகத் தத்துவங்களும், செயல் சித்தாந்தங்களும், ... இந்துமத வாழ்வு வாழும் இந்துக்களுக்கே தெரியாமல் போய்விட்டது, தெரியாமல் போய்விட்டது, தெரியாமல் போய்விட்டது, தெரியாமலேயே போய்விட்டது. அதன் பிறகே, (I) 'ஐந்தீ வேட்டல்' எனப்படும் 'ஓமம்', 'ஓகம்', 'யாகம்', 'யக்ஞம்' 'வேள்வி' என்ற பூசை நெறி முறைகளும், (II) 'முத்தீ ஓம்பல்' எனும் 'கொடிநிலை' 'கந்தழி', வள்ளி' எனும் பூசை நெறிமுறைகளும், (III) 'தவம்', 'ஞானம்' முதலிய பூசை நெறிமுறைகளும், (IV) 'கருவறை', 'வெட்டவெளிக் கருவறை', 'வழிபாட்டு நிலையக் கருவறை', 'கோயில் மூலக் கருவறை', எனும் நான்கு இடங்களில் நிகழ்த்தப்பட வேண்டிய பூசைநெறிமுறைகளும், V 'குரு', குருக்கல், குருமார், பூசாரி எனும் நால்வரின் பூசைநெறிமுறைகளும் (VI) புதிதாக வைக்கப்படும் சிலைகளுக்குரிய உயிர்ப்பு; ஆற்றல் குன்றிய அல்லது அருள் நலம் நலிந்த சிலைகளுக்குரிய புத்துயிர்ப்பு ... முதலியவற்றைச் செய்வதற்குரிய பூசை நெறிமுறைகளும்; (VII) முடிகயிறு, தாயத்து, சக்கரம், இயந்தரம், இயந்திரம், இயந்திறம், எந்தரம், எந்திரம், எந்திறம் ... முதலியவைகளைத் தயாரிப்பதற்குரிய பூசை நெறிமுறைகளும்; (VIII) காற்று, கருப்பு, பேய், பிசாசு, பில்லி, சூனியம், ஏவல், செய்வினை, வைப்பு, கழிப்பு, மருந்து, கண்ணேறு, முதலியவற்றைத் தடுத்து அகற்றி நலமளிக்கும் பூசை நெறிமுறைகளும்

(IX) பீடம், மடம், ஆதீனம், தம்பிரான், சன்னிதானம், சந்நதி, சந்நிதி, ஆச்சாரியார், பண்டாரம் ... முதலியவர் களுக்குரிய பூசை நெறிமுறைகளும் ... இந்து மதத்தில் இருந்தும் இல்லாதவைகளாகப் போய்விட்டன. இருந்தும் இல்லாதவைகளாகப் போய்விட்டன, இருந்தும் இல்லாத-வைகளாகப் போய்விட்டன. அதாவது, மேலே குறிப்-பிட்ட 'பூசை நெறிமுறைகள்' அனைத்தும் அன்னிய மொழிகளாலும், அன்னியர்களாலும் தெரிந்து கொள்ள முடியாமல் போனமையாலும்; புரிந்து கொள்ள முடியா-மல் போனமையாலும் தான், காலப்போக்கில் அனைத்தையும் மறுக்கவும், வெறுக்கவும், எதிர்க்கவும், பகைக்கவும், புறக்கணித்து ஒதுக்கவும், இழித்துப் பழித்-துக் குறைக்கவும், மறைக்கவும் நேரிட்டுவிட்டன, நேரிட்டு விட்டன, நேரிட்டுவிட்டன, இப்படியெல்லாம் அன்னிய-ரும் அன்னிய மொழியினரும் செயல்பட்டிட்ட காரணத்-தினால்தான்; பிண்டங்களையும், அண்டங்களையும் பேரண்-டங்களையும், அண்டபேரண்டங்களையும் ஆளுகின்ற இந்து வேதம்; தான் வாழும் இந்துமத இந்தியாவிற்குள்ளேயே தேக்கம் பெற்று, முடக்கம் பெற்று, அடக்கம் பெற்று, ஒடுக்கம் பெற்றுச் செயல்நலம் அனைத்தும் குன்றிச் செத்-துப்போன நிலையை அடைந்துவிட்டது. எனவேதான் இந்துக்கள் இந்துமதத்தின் பூசை நெறிமுறைகளால் தேவைக்கேற்ப அருளை விருந்தாகவும், மருந்தாகவும், அநுபவப்பூர்வமாகப் பெறமுடியாமல் போய்விட்டது, பெறமுடியாமல் போய்விட்டது, பெறமுடியாமல் போய் விட்டது, பெறமுடியாமலேயே போய்விட்டது. இவற்றால் தான் இந்துக்கள் வேற்றுமதங்களையும், மாற்றுமதங்களை-யும் நாடித்தேடி ஓடினார்கள்! ஓடினார்கள்!! ஓடினார்கள்!!! ஓடிக் கொண்டேயிருக்கிறார்கள்! ஓடிக்கொண்டேயிருக்-கிறார்கள்!! ஓடிக்கொண்டேயிருக்கிறார்கள்!!! இப்படிப்



பட்ட ஓட்டத்தைத் தடுத்து நிறுத்திடும் அக்கறையோ! அறிவோ! ஆர்வமோ! ஆற்றலோ! தரமோ! திரமோ! திறமோ! தீரமோ! உரமோ! அறமோ! மறமோ! வீரமோ! ... உடைய இந்துமதத் தலைவர்களுமில்லை, தொண்டர்களுமில்லை, பத்தர்களுமில்லை. இப்படி இந்து மதத்திற்கு ஏற்பட்டுள்ள, ஏற்பட்டுவிட்ட அவல கேவ-லங்களைப் பற்றி எண்ணிப்பார்த்திட இந்து மதத்தவர்-களுக்கு அருளார்ந்த அழைப்பு அறிவிப்பையும், அறி-வார்ந்த அழைப்பு அறிவிப்பையும் வழங்குவதுடன், மேலும் காலப்போக்கில் எப்படியோ குறைத்தும் மறைத்-தும் மறந்து போகும்படிச் செய்திடப்பட்ட, மிகத்தெளி-வான, எளிமையான, வெளிப்படையான நேரடியான வரலாற்று உண்மைகள் இக்கலியுகத்தில் குழப்பங்களும், முரண்பாடுகளும், குறைகளும் மிகுந்த தெளிவற்ற நிலையில் வாழுகின்ற அவல கேவல நிலைகளையும், சீரழிவுகளையும் செப்பனிடும் மாபெரும் பணியில் ஈடுபட்டுள்ளது தான், இந்து வேத நாயகம், இந்து மதத்தந்தை, இந்து வேத பீடம், இந்து மதத் தலைமை ஆச்சாரிய மடம், இந்து மத முழுமுதற்தலைமைக் குருபீடம், இந்துமத மூலப்பண்டா-ரம், இந்துமத மூலக் குருமகாசன்னிதானம், இந்துமத மூல ஆதீனம், இந்துமத மூலத்தம்பிரான், இந்துமத மூலப்பண்டார சந்நதி, இந்துமத மூலப்பண்டார சந்நிதி என்ற உரிமைகளுக்கும், பெருமைகளுக்கும் உரிய இந்து மதத்தைத் தோற்றுவித்த பதினெண் சித்தர் மடம், பீடம் கருகுலம். இது காரனோடை, சென்னை - 600 067-இல் அமைந்துள்ளது. இம் மாபெரும் பணிகளுக்கும், இந்து வேதத்தை ஆர்வமுடையவர்களுக்குப் பயிற்றுவிக்க இந்து வேத பாடசாலை அமைக்கும் பணிக்கும், ஏதுக்களையும், ஏந்துகளையும், பொருளுதவிகளையும் அளிக்க முன் வாரீர்! வாரீர்! வாரீர்!

**உரிமை வெளியீடு**

**இந்து வேத பீடம்,**
பதினெண்சித்தர் மடம்,
காரணோடை, சென்னை - 600 067.

இப்புத்தகத்தில் உள்ள கருத்துக்களை முழுமை-யாகவோ, பகுதியாகவோ மடத்தின் முன் அனுமதியின்றி வெளியிடுபவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

அலுவலகம் : தொலைபேசி-654447

**ஞானாச்சாரியார்**
ஞாலகுரு, சித்தர் கருவூரூர்,
வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை - 600 053

அறக்கட்டளை :

3, N. G. O. நகர்,
பொன்னேரி – 601 204.

**இந்து வேதத்தை** வெளியிட்டதற்கு இந்துமறுமலர்ச்சி இயக்கமும், (IMI), அதன் கிளை இயக்கங்களும் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.




OUR BEST WISHES TO
THE INDU VEDA CONFERANCE



**SITATEX**

**CHANDRA ENTERPRISES**
Mfrs in Highclass hand loom Bedsheets,
Towels, & Dhothies etc.

No : 1. Pension Line Velu Street,
Dadagapatty, **SALEM - 636 006.**

"இந்துவேத மாநாடு" வெற்றிபெற்று
இந்துவேதக் கருத்துக்கள் உலக மக்களிடையே
பரவி உலக மக்கள் அனைவரும் உய்ய வாழ்த்தும்

**அலமேலு இன்ஜினியரிங் ஒர்க்ஸ்**
காரைக்குடி

**மலர் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்**
காரைக்குடி

**வேட்டைக்காளி சைக்கிள் கடை**
காரைக்குடி

**பஃறுளி கம்ப்யூட்டர்**

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்**
**சித்தர் கருவூரர் குண்டலினி மையம்**

---

**இந்து வேத மாநாடு** சிறப்புற்று
இந்துமதம் தழைக்க
எங்களது வாழ்த்துக்கள்

## பாலாஜி ஸ்டோர் &
## சரசுவதி சமையல் பாத்திர ஸ்டோர்

**17, கவரைத்தெரு**
**இராசிபுரம்**
சேலம்

இந்து வேத மாநாட்டிற்கு எங்களது
இனிய நல்வாழ்த்துக்கள்

கடவுள், உலகம், விண், விண்கடந்த உலகங்கள், மனிதவாழ்வு, சமுதாய வாழ்வு, தமிழ்மொழி ... இவற்றைப் பற்றிய முழுமையான, முறையான, உண்மையான ... செய்திகளைக்கூறும்,

**"இந்துவேத மாநாடு"**

வெற்றி பெறுக என வாழ்த்தும்

# கேசவன் ஏஜன்ஸி

உரம் & பூச்சி மருந்து — விநியோகஸ்தர்கள்
நெல்பேட்டை, மதுரை - 625 001.

இந்து வேத மாநாட்டிற்கு எங்களது
இனிய நல்வாழ்த்துக்கள்

Phone No. 65

# ஸ்ரீ சிவசக்தி டிரேடர்ஸ் &
## கோழிப்பண்ணை

உரிமையாளர் :
R. துரைசாமி Ex. நிலவள வங்கித்தலைவர்
அனந்த கவுண்டம்பாளையம்
வெண்ணந்தூர், சேலம்

எங்களிடம் தரமான கோழித் தீவனங்கள் மூலப்பொருட்கள், முட்டைகள் முதலியவை மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

இந்து வேத மாநாட்டிற்கு எங்களது
இனிய நல்வாழ்த்துக்கள்

Phone : 65211

# ஸ்ரீபாலசுப்பரமணியா மூவிஸ்

51, சிட்டுக்கோயில் தெரு,
சேலம்-1.

இந்து வேத மாநாடு வெற்றியடைய
எங்களது அன்பான வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்கிறோம்.

## சௌம்யா நிட்டிங்ஸ்

**No : 4, கண்ணகி தெரு,**
**நெசவாளர் காலனி,**
**P.N. ரோடு, திருப்பூர்**

prop : S.V. வீரிசெட்டி M.Com.,B L.,

இந்து வேத மாநாட்டிற்கு எங்களது
இனிய நல்வாழ்த்துக்கள்.

தரம் ஒன்றே எங்கள் குறிக்கோள்

நவீன பரிசோதனைச்சாலையில் ஆய்வு
செய்யப்பட்டு அதிநவீன ஆலையில்
உற்பத்தியாகும்

## சக்தி பீட்ஸ்

கோழி மற்றும் மாட்டுத் தீவனங்கள்
உபயோகித்து பெரும் பயன்பெறுவீர்

நிர்வாக இயக்குனர் : திரு. சு. கந்தசாமி B.A.

சக்தி பீட்ஸ் பிரைவேட் லிமிடெட்
வெண்ணந்தூர் - P.o. Phone No : 72 & 92
54103
51319 சேலம்
50513

OUR BEST WISHES TO
THE INDU VEDA CONFERANCE



**SITATEX**

## Mathurai Ratna Textile

**Mfrs in Highclass hand loom Bedsheets, Towels, & Dhothies etc.**

**161, Sankagiri Main Road,
Dadagapatty, SALEM - 636 006.**

தொடக்கம் : 1979

உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு வளர நடக்கும்
'இந்துவேத மாநாடு' தமிழக மக்களிடையில் பரவி
முழு வெற்றிபெற வாழ்த்தும்



## யுனைடெட் பிரிண்டர்ஸ்

**32, பெருமாள் கோவில் தென்மாடவீதி
மதுரை – 625 001.
(மதுரை மத்திய பேருந்து நிலையம் அருகில்)**

* அழகிய அச்சுவேலைகளும்
* அவசர அச்சு வேலைகளும்
* புத்தக அச்சு வேலைகளும்

சிறந்த முறையில் குறித்தகாலத்தில் செய்துதர மேற்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

அச்சக உரிமையாளர்கள் :

**N. ஜெயசந்திரன், R. வெங்கடாசலம்**